வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com

மலர் : 06

19.05.2025 திங்கட்கிழமை

இதழ் : 140

பக்கங்கள் : 12




படுகொலையான உறவுகளை நினைந்து

# தமிழர் வாழ் இடங்களெங்கும் உணர்வுபூர்வ நினைவேந்தல்!

## முள்ளிவாய்க்காலில் பல்லாயிரம் பேர் திரண்டனர்

முள்ளிவாய்க்கால், மே 19

தமிழின படுகொலையின் 16ஆவது ஆண்டு நினைவுதினமான நேற்று தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு, புலம்பெயர் தேசங்கள் எங்கும் நினைவேந்தல்கள் நடைபெற்றன. முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் பல்லாயிரம் மக்கள் திரண்டு, கொல்லப்பட்ட தமது உறவுகளுக்காக கண்ணீர்விட்டு கதறியழுது, அவர் களை நினைவுகூர்ந்தனர்.

11






முற்பகல் 10.15 மணிக்கு தவத்திரு அகத்தியர் அடிகளாரின் கொள்கைப் பிரகடன உரையுடன் நினைவேந்தல் நிகழ்வு ஆரம்பமானது. தொடர்ந்து, மணி ஒலி எழுப்பப்பட்டது. இதைத் தொடர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டது. முற்பகல் 10.31 மணிக்கு பொதுச் சுடர் ஏற்றப்பட்டது. பொதுச் சுடரை இறுதிப் போரில் மனைவியையும் இரு பிள்ளைகளையும் பறிகொடுத்த முள்ளிவாய்க்கால் மேற்கை சேர்ந்த வீரசிங்கம் இராசேந்திரா ஏற்றி வைத்தார். பொதுச் சுடர் ஏற்றப்பட்ட சமநேரத்தில் நினைவேந்தலில் பங்கேற்ற மக்கள் தமது உறவுகளுக்காக தீபம் ஏற்றி வைத்தனர்.

இதன்போது, கொல்லப்பட்ட தங்களின் உறவுகளை நினைந்து அங்கு திரண்டிருந்த மக்கள் கண்ணீர்விட்டு கதறி அழுதனர். அத்துடன், இழந்த தமது உறவுகளின் புகைப்படங்களை வைத்தும் - படையலிட்டும் அவர்களுக்காக பிரார்த்தித்தும் நினைவேந்தல் கடைப்பிடிக்கப்பட்டது.

நினைவேந்தலில் பங்கேற்றவர்களுக்கு தங்கள் உறவுகளின் நினைவாக முள்ளிவாய்க்கால் கஞ்சி, அன்னதானம், பானங்களையும் பலர் வழங்கினர்.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் பல்லாயிரக் கணக்கான மக்கள், மதத் தலைவர்கள், அரசியல்வாதிகள் என்போர் பங்கேற்றனர்.

11

## முள்ளிவாய்க்கால் அஞ்சலி; கொழும்பில் நேற்று குழப்பம்!

### நினைவேந்தலில் ஈடுபட்டோரை 'கள்ள புலிகள்' என்றும் கோஷம்!



கொழும்பு, மே 19

கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை குழப்ப குழு ஒன்று முயன்றது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நேற்றைய தினம் கொழும்பு - வெள்ளவத்தையில் முன்னெடுக்கப்பட்டது. பொலிஸ் பாதுகாப்புடன் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. இதில், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரனும் பங்கேற்றிருந்தார்.

அந்தச் சமயம் அங்கு வந்த சிலர், நினைவேந்தலை குழப்பும் நோக்கில் அந்தப் பகுதிக்கு

11

## நாடு திரும்புகிறார் பஸில்?

கொழும்பு, மே. 19

பொதுஜன பெரமுனவின் முன்னாள் தேசிய அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ நாடு திரும்ப உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்படி, எதிர்வரும் வியாழக்கிழமை அவர் நாடு திரும்பவுள்ளதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்குப்

11

## போரை முடித்துவைத்த தருணத்தை தவறாக காட்டுவதற்கு முயற்சிகள்!


### நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 19

போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான செயற்பாடுகளைத் தவறாகக் காட்ட நினைக்கும் முயற்சிகள், இலங்கை மக்களின் ஒற்றுமையையும் வலிமையையும் பாதிக்கும் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சமூக ஊடக பதிவொன்றில் இதனைக் குறிப்பிட்டுள்ள அவர், நீண்ட ஆண்டுகளாக தொடர்ந்த போரை முடிவுக்குக் கொண்டு வந்து, நாட்டில்

11



## தமிழின விடுதலை நோக்கி தொடர்ந்தும் போராடுவோம்

### முள்ளிவாய்க்காலில் பிரகடனம்

முள்ளிவாய்க்கால், மே 19

தமிழ் தேசிய நம்பிக்கையின் உறுதி கொண்டு ஒரு குடையின் கீழ் தமிழின அடக்குமுறைக்கெதிராக - தமிழின விடுதலையை நோக்கி முனைப்புடன் மக்கள் பலத்துடன் தொடர்ந்தும் அடிபணியாது போராடுவோம் - இவ்வாறு முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் நேற்று வெளியிடப்பட்ட பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

11

## யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்!

யாழ்ப்பாணம், மே. 19

யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் நினைவு தூபி முன்பாக அஞ்சலி நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

முள்ளிவாய்க்கால் நினைவு தினமான நேற்றைய தினம் நடைபெற்ற இந் நிகழ்வில் பல்கலைக்கழக மாணவர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கல்விசார், சாரா ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டு சுடரேற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். (அ)

## தேசிய போர் வீரர் நினைவுநாள் இன்று ஜனாதிபதி தலைமையில்

03

## யாழில் திடீரென்று உயிரிழந்த இளைஞரின் மரணத்தில் மர்மம்!

யாழ்ப்பாணம், மே. 18

இளைஞர் ஒருவர் திடீரென மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார். வண்ணார்பண்ணை, கே.கே.எஸ் வீதியைச் சேர்ந்த பாலச்சந்திரன் சசிராஜ் (வயது 29) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞனின் தாய், தந்தை மற்றும் சகோதரர்கள் கடந்த 16ஆம் திகதி மட்டக்களப்புக்கு சென்றிருந்தனர். இந்நிலையில் குறித்த இளைஞனும் அவரது அண்ணனும் மட்டுமே வீட்டில் இருந்தனர்.

பின்னர், நேற்று முன்தினம் இரவு அவர்களது

11

## தேர்தலில் விளையாடிய பணம் விசாரணைக்கு அநுர உத்தரவு!

கொழும்பு, மே. 19


இந்த மாதம் நடைபெற்ற உள்ளூராட்சிசபைத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூராட்சிசபை உறுப்பினர்களுக்கு போதைப்பொருள் கடத்தல்காரர்கள் நிதியுதவி அளித்ததாக தனக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும், அரசியல் செயல்முறையில், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியல் கும்பல்கள் ஊடுருவுவது குறித்து விசாரிக்குமாறு காவல்துறையினரிடம் கேட்டுக் கொண்டதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் இனவழிப்பின் 16ஆம் ஆண்டு நினைவேந்தலில்...







யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் நினைவு தூபி முன்பாக அஞ்சலி நிகழ்வு இடம்பெற்ற தருணம்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
19.05.2025 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், வைகாசி 05

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 205 2300**

## முள்ளிவாய்க்கால் - 16

முள்ளிவாய்க்கால் வழமைபோல் நினைவு கூரப்பட்டிருக்கின்றது. ஒப்பீட்டடிப்படையில் அச்சமின்றி நினைவு கூரப்பட்டிருக்கின்றது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தொடர்பில் தமிழ் மக்கள் அச்சப்படவில்லை, இதனால், மிகவும் அமைதியாக இறந்தவர்களை நினைவு கூரும் கடமையை, உயிரிழந்தவர்களின் உறவுகள் மேற்கொண்டிருக்கின்றனர். இதற்கு எவ்வாறான அரசியல் விளக்கங்களை முன்வைத்தாலும் கூட, உயிரிழந்தவர்களை, அவர்களின் உறவுகள் நினைவு கூர்வதென்பது அவர்களைப் பொறுத்தவரையில் ஒரு உணர்வுபூர்வமான விடயம். அவர்களின் உணர்வில் அரசியல் இல்லை. வேதனைகளும், சோகமுமே அவர்களை முள்ளிவாய்க்காலுக்கு கொண்டு சேர்கின்றது.

முள்ளிவாய்க்கால் ஓர் அரசியல் செய்தி - அரசியல் அனுபவம் - உலகத்தை புரிந்து கொள்வதற்கான ஒரு பாலபாடம். ஆனால் முள்ளிவாய்க்காலிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொண்டதற்கான அரசியல் சாட்சியாக ஒரு தமிழ் அரசியல்வாதியும் இல்லை. நாங்கள் கற்றுக் கொள்ளவே மாட்டோம் என்னும் இறுமாப்புடன்தான் தமிழ்த் தேசியத்தின் பெயரால் அரசியல் முன்னெடுக்கப்படுகின்றது.

முள்ளிவாய்கால் பேரழிவு என்பது உலகை சாட்சியாகக் கொண்டுதான் இடம்பெற்று முடிந்தது. ஒரு குறிப்பிட்ட யுத்த வலயத்திற்குள் மக்கள் ஒன்று சேரும் போது, யுத்தம் தீவிரப்படுத்தப்பட்டால் மக்கள் பெருந்தொகையாக இறப்பார்கள் என்பது, உலகம் அறியாத ஒன்றல்ல. ஐக்கிய நாடுகள் சபை பார்த்துக் கொண்டிருக்கும் போதுதான் அனைத்தும் நடந்து முடிந்தது போனது.


ஐக்கிய நாடுகள் சபை பார்த்துக் கொண்டிருக்கும் போது இதற்கு முன்னரும் பேரழிவுகள் இடம்பெற்றிருக்கின்றன. அது முள்ளிவாய்க்காலை விடவும் கொடிய பேரழிவு. நூறு நாட்களில், எட்டு லட்சம் மக்கள் ருவாண்டாவில் கொல்லப்பட்ட போதும், ஐக்கிய நாடுகள் சபை வேடிக்கைதான் பார்த்துக் கொண்டிருந்தது. கௌதமாலாவில் இரண்டு லட்சம் மாயன் பழங்குடி மக்கள் கொல்லப்பட்டபோதும், ஐக்கிய நாடுகள் சபை வேடிக்கைதான் பார்த்துக் கொண்டிருந்தது. இந்தப் பின்புலத்தில், ஐ.நா முள்ளிவாய்க்காலில் வேடிக்கை பார்த்ததில் என்ன ஆச்சரியமுண்டு.

ஏற்கனவே தோற்றுப் போன ஐக்கிய நாடுகள் சபை முள்ளிவாய்க்காலிலும் மீண்டுமொரு அதன் தோல்வியை பதிவு செய்தது - அந்த வகையில் முள்ளிவாய்க்கால் மனித அவலங்களின் முதல் இடமும் அல்ல, கடைசி இடமும் அல்ல. அந்தக் கடைசி இடம் எதுவென்பதை எவரும் அறியார். ஏனெனில் உலகம் பல போர்களுக்கு இப்போதும் தயாராகவே இருக்கின்றது. ஏனெனில் உலகம் அதிகாரப் போட்டியின் பலிபீடம். இன்னொரு வகையில் கூறுவதானால் உலக அரசியல் என்பது வெற்றிக்கான சூதாட்ட மேடை. அங்கு வெற்றிக்கு விதிகள் கிடையாது.

ஒப்பாரிகள், ஆவேசங்கள், கருணை மனுக்கள் எவையும் இந்தச் சூதாட்டத்திற்கு முன்னால் பெறுமதியற்றவை. முள்ளிவாய்க்கால் தமிழர்களுக்கு உணர்த்தியிருக்கும் பேருண்மை இதுதான். ஆனால் இந்தப் பேருண்மையை புரிந்து கொண்டு, தங்களை தயார் செய்து கொள்ளும் ஓர் இனக் கூட்டமாக ஈழத் தமிழர்கள் இல்லை. இதுதான் கடந்த பதினைந்து வருடகால அரசியல் அனுபவம். கற்றுக்கொள்ள மறுத்தால், இனியும் இந்த நிலைமை தொடரும். ஆண்டுகள் தோறும், அழுதுவிட்டுச் செல்வதாக, முள்ளிவாய்க்கால் நினைவுகளும் நீளும். ஒரு கட்டத்தில் வெறும் சடங்காச்சாரமான விடயமாக சுருங்கிப் போகும்.

நாசிகளால் சிதைகப்பட்டு, சின்னாபின்னமாக்கப்பட்ட யூதர்களின் கதைகளை, முள்ளிவாய்க்கால் நினைவோடு ஒப்பிடுவதை ஒரு அரசியலாக்க சிலர் முயற்சிக்கலாம். ஆனால் யூதர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய ஓர் அடிப்படையான தந்திரப் பாடத்தை எவருமே தமிழ்ச் சூழலில் கூறுவதில்லை - அது என்ன? சிதறிடிக்கப்பட்ட யூதர்கள், மீண்டும் நிமிரும் வரலாற்றுப் பயணத்தில், ஒரு பலவான் நண்பனை சம்பாதித்துக் கொண்டனர். அதுவே அவர்களின் பலமானது. ஈழத் தமிழர்களுக்கான பலவான் நண்பன் யார்? அவ்வாறான ஒரு நண்பனை சம்பாதித்துக் கொள்ள ஏன் தமிழர்களால் முடியவில்லை?

## வவுனியாவில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்




வவுனியா, மே 19

இறுதி யுத்தத்தில் மரணித்தவர்களை நினைவு கூரும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வவுனியா குருமண்காடு பிள்ளையார் ஆலயத்தில் இந்த அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

அந்தணர் ஒன்றியத்தின் ஆலோசகர் ஜெயந்திநாத குருக்கள் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பொதுமக்களும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு தீபமேற்றி வழிபாடுகளில் ஈடுபட்டனர். (எ)

# இவ்வருடம் நடுத்தரகாலத்தில் பணவீக்கம் 5 சதவீதமாக பதிவு

கொழும்பு, மே 19

2024 ஆம் ஆண்டை மீட்சிக்கான ஆண்டு என அடையாளப்படுத்த முடியுமென இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் கலாநிதி சுஜிதா ஜெகஜீவன் தெரிவித்துள்ளார். இதே வேளை, பணவீக்கமானது இவ்வருடம் நேர்மறையாக உயர்வடைந்து, நடுத்தரகாலத்தில் 5 சதவீதமாகப் பதிவாகும் எனவும் அவர் எதிர்வுகூறியுள்ளார்.

மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பொருளாதார மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் நாட்டின் பொருளாதார நிலவரம் குறித்து தெளிவுபடுத்தும் நோக்கில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மத்திய வங்கியின் கேட்போர் கூடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கருத்தரங்கில் பங்கேற்று தெளிவுபடுத்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வறிக்கையின் பிரகாரம் நாட்டின் பொருளாதாரமானது இரு ஆண்டுகளுக்கு முன்னர் முகங்கொடுத்த மிகமோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து 2024 ஆம் ஆண்டு வலுவான மீட்சியடைந்தது.

அந்த மீட்சியை நோக்கிய பாதை மிகக் கடினமானதாக இருப்பினும், கடன்களை மீளச்செலுத்த முடியாமல் வங்குரோத்து நிலையை அடைந்த ஏனைய நாடுகளின் மீட்சிக்காலத்துடன் ஒப்பிடுகையில் இலங்கை மிக வேகமாக மீட்சியைப் பதிவுசெய்தது.

இதேபோன்று சர்வதேச நாணய நிதியத்தால் வலியுறுத்தப்பட்ட மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் அரசியல் ஸ்திரத்தன்மை மீளுறுதிப்பட்டது. அது மாத்திரமன்றி குறிப்பாக வெளியகக் கடன் மறுசீரமைப்பு செயன்முறை முழுமையாகப் பூர்த்தியடையும் தருவாயை எட்டியது. எனவே, 2024 ஆம் ஆண்டை மீட்சிக்கான ஆண்டு என அடையாளப்படுத்த முடியும்.

இதன்படி மத்திய வங்கியின் பிரதான கடப்பாடுகளில் ஒன்றான விலை உறுதிப்பாட்டைப் பொறுத்தமட்டில், 2024 ஆம் ஆண்டு முழுவதும் படிப்படியான வீழ்ச்சியைப் பதிவு செய்த பணவீக்கம், ஆண்டின் இறுதியில் பணச்சுருக்கத்தைப் பதிவுசெய்தது.

இதேவேளை தொடர்ச்சியாக இரு ஆண்டுகள் பொருளாதாரச்சுருக்கம் பதிவாகியிருந்த நிலையில், கடந்த ஆண்டு நாட்டின் பொருளாதாரம் 5 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது.

அத்தோடு 2023 ஆம் ஆண்டு 4.4 சதவீதமாகப் பதிவாகியிருந்த வேலைவாய்ப் பின்மை வீதம், 2024 ஆம் ஆண்டு 0.5 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது.

மேலும் பணவீக்கமானது இவ்வருடம் நேர்மறையாக உயர்வடைந்து, நடுத்தரகாலத்தில் எதிர்பார்க்கப்படும் 5 சதவீத மட்டத்தைப் பதிவுசெய்து, ஸ்திரமடையும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. (எ)

## தேசிய போர் வீரர் நினைவுநாள் இன்று ஜனாதிபதி தலைமையில்


கொழும்பு, மே 19

யுத்த வெற்றியின் 16ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் இன்று நடைபெறும் தேசிய வெற்றி கொண்டாட்டத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க பங்கேற்பார் என்று இராணுவ வீரர்கள் சேவை அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த நிகழ்வு, ஜனாதிபதியின் தலைமையில் நடைபெறும் என்று அதன் தலைவர் செனரத் கோஹோன தெரிவித்தார்.

யுத்த வெற்றியின் 16ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் தேசிய வெற்றி கொண்டாட்டம் சிறீஜெயவர்த்தனபுர கோட்டையில் உள்ள இராணு வீரர்கள் நினைவுச் சின்னத்துக்கு முன்பாக மாலை 04.00 மணி முதல் 06.00 மணி வரை நடைபெறவுள்ளது. (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**

பிள்ளைகளால் மதிப்பு கூடும். உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**இடபம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் தன்னம்பிக்கை குறையும். உறவினர் நண்பர்களால் செலவினங்கள் அதிகரிக்கும். சிலரின் தவறான செயல்களை எண்ணி வருந்துவீர்கள்.

**மிதுனம்**

பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். மனதிற்குப் பிடித்த பொருளை வாங்கி மகிழ்வீர்கள். மனைவிவழி உறவினர்கள் மதிப்பார்கள். எதிர்பார்த்த வேலைகள் முடியும் நாள்.

**கடகம்**

எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். நாடி வந்தவர்களுக்கு உதவுவீர்கள். பழைய சிக்கலில் ஒன்று தீரும்.

**சிம்மம்**

குடும்பத்தினருடன் உங்களின் நேரத்தை செலவழிப்பீர்கள். உங்களை சுற்றி உள்ளவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். கனவு நனவாகும் நாள்.

**கன்னி**

தடைகளை கண்டு தளர மாட்டீர்கள். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். புதுவேலை கிடைக்கும். வாகன வசதிப்பெருகும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு.

**துலாம்**

பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். விருந்தினர் வருகை அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். நினைத்ததை முடிக்கும் நாள்.

**விருட்சிகம்**

கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். நண்பர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். புதிதாக ஆடை ஆபரணம் வாங்குவீர்கள். உதவிகள் கிடைக்கும்.

**தனுசு**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள்.

**மகரம்**

கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. யாரையும் பரிந்துரை செய்ய வேண்டாம். பணம் வாங்கித் தருவதில் குறுக்கே நிற்காதீர்கள். வாகனத்தில் கவனம் தேவை.

**கும்பம்**

உங்களுடைய ஆலோசனைகள் எல்லோரும் ஏற்கும் படி இருக்கும். குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். திடீரென்று அறிமுகமாகும் நபரால் பயனடைவீர்கள். சாதிக்கும் நாள்.

**மீனம்**

சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். உறவினர் நண்பர்களுடன் மனம் விட்டு பேசுவீர்கள். காணாமல்போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும்.

# நந்திக்கடலில் மலர்தூவி அஞ்சலி



முல்லைத்தீவு, மே 19

முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையின் 16ஆம் ஆண்டு நினைவுநாள் நேற்றாகும். அந்தவகையில் முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளுக்கு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை நந்திக்கடலில் மலர்தூவி அஞ்சலி செலுத்தினார்.

பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனால், நந்திக்கடலில் மலர்தூவி, சுடரேற்றி உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத்தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்,


எங்கள் பெருமைமிகு வரலாற்றின் சோகமான இறுதிக் காட்சிகளின் மௌனமான சாட்சியே இந்த நந்திக்கடல். ஏராளமான எங்கள் உறவுகளின் கண்ணீரும் செந்நீரும் கலந்துள்ள இந்தக் கடலன்னையை வணங்கி, உயிர்நீத்த எங்கள் உறவுகளுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தியதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, வற்றாப்பளை கண்ணகியம்மன் ஆலயத்தில் உயிரிழந்தவர்களின் ஆத்ம சாந்திவேண்டி பிரார்த்தனையும் நடைபெற்றது.

மேலும், இந்த அஞ்சலி நிகழ்வுகளில் உள்ளூராட்சி தேர்தலில் கரைதுறைப்பற்று பிரதேச சபையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பாக போட்டியிட்டு வெற்றியீட்டிய இரத்தினம் ஜெகதீசனும் பங்கேற்றிருந்தார். (எ)

# தமிழின அழிப்புநாள் மன்னாரில் நேற்று நினைவுகூரப்பட்டது!





மன்னார், மே 19

தமிழினப் படுகொலையின் (மே18) 16 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை மன்னாரிலும் நினைவு கூரப்பட்டது.

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின்

தலைவர் வி. எஸ். சிவகரன் தலைமையில் மன்னார் பஜார் பகுதியில் காலை 09.00 மணியளவில் இந்த நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இறுதி யுத்தத்தின் போது முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளை நினைவுகூர்ந்து பொதுச் சுடர் ஏற்றப்பட்டு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதனைத்தொடர்ந்து முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி பகிரப்பட்டது.

குறித்த நினைவேந்தல் நிகழ்வில் ஜெயபாலன் குரூஸ் அடிகளார், மன்னார் நகர சபையின் முன்னாள் தவிசாளர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ)

### போரில் படுகொலை செய்யப்பட்ட

# குழந்தைகளை நினைவுகூர்ந்து சிறார்கள் விளக்கேற்றி அஞ்சலி

யாழ்ப்பாணம், மே 19

இறுதிப் போர் உள்ளிட்ட அரச படை நடவடிக்கைகளில் படுகொலை செய்யப்பட்ட சிறார்களை நினைவு கூர்ந்து சிறுவர்களின் பங்கேற்புடன், வலிகாமம் கிழக்கு வாதரவத்தை வீரவாணி ஞானவாணி சனசமூக நிலையத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு உணர்வுபூர்வமாக அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

பொதுச் சுடரினை போரில் மகனை இழந்த தந்தை எஸ். சுந்தரவேல் ஏற்றினார்.

போரில் சிறுவர்களுக்கு எதிராக அரசு மேற்கொண்ட தாக்குதல்களின் கோரத்தையும் அது தொடர்பில் பொறுப்புக்கூறப்படாமை மற்றும் மறுக்கப்பட்ட நீதி தொடர்பில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஸ் அஞ்சலியுரையாற்றினார்.

சனசமூக நிலைய நிர்வாகிகள், பொது அமைப்புக்களின் செயல்பாட்டாளர்கள் எனப் பலரின் பங்கேற்புடன் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன.

தொடர்ந்து இராணுவ நடவடிக்கைகளில் மனிதாபிமானமற்ற முறையில் கோரமாக படுகொலை செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான சிறுவர்களை நினைவுகூர்ந்து 16 தீபங்கள் ஏற்றப்பட்டு அஞ்சலிப்பிரார்த்தனை நடைபெற்றது.

போரின் பின்பாக கடந்த 16 ஆண்டுகளாக நாம் நீதி கிட்டாதவர்களாக அடக்குமுறைக்குள் ஏங்குகின்றோம் என்பதை மையப்படுத்தியதாகவே 16 தீபங்கள் ஏற்றப்பட்டன.

அதனைத் தொடர்ந்து போருக்குப் பின்னர் முள்ளிவாய்க்கால் இறுதிப் போரில் வலிந்து காணாமலாக்கப்பட்டவரின் தாயாரான பா. யோகராணி முள்ளிவாய்க்கால் கஞ்சியை வழங்கினார்.

தொடர்ந்து போரின் வலிகளையும் அவ் வலிகளுக்கும் கொடூர அநீதிகளுக்கும் உள்நாட்டில் நீதி வழங்கப்படவில்லை என்பதை வெளிப்படுத்தி சர்வதேச நீதி ஒன்றே உள்நாட்டில் பாதிக்கப்பட்டு ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாகும் எமக்கான பரிகாரம் என்ற தொனிப்பொருளில் ஆடல் மற்றும் பாடல் நிகழ்வுகளும் நடைபெற்றன. சிறுவர்களின் அஞ்சலி நிகழ்வுகள் பெற்றோர், பாதுகாவலர் முன்னிலையில் நடைபெற்றன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன வர்த்தக அமைச்சர் தலைமையில் சிறப்புக் குழு இலங்கைக்கு வருகிறது

கொழும்பு, மே 19

**சீன வர்த்தக அமைச்சர் வாங் வென்டாவோ தலைமையிலான 115 பேர் கொண்ட உயர்மட்ட பிரதிநிதிகள் குழு எதிர்வரும் 28 ஆம் திகதி புதன்கிழமை இலங்கைக்கு வருகை தரவுள்ளது.**




சர்ச்சைக்குரிய புதிய அமெரிக்க வரி கட்டணக் கொள்கையால் ஏற்பட்ட தொடர்ச்சியான கொந்தளிப்புக்கு மத்தியில் இந்தக் குழு இலங்கை வருகிறது.

இலங்கையுடனான இருதரப்பு உறவுகளை மேலும் மேம்படுத்தவும் புதிய பொருளாதார முதலீட்டு வாய்ப்புகள் குறித்து ஆராயும் வகையிலேயே உயர்மட்ட பிரதிநிதிகள் குழு கொழும்புக்கு வரவுள்ளதாக தெரிவித்துள்ள சீன தரப்பு, ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய உள்ளிட்ட அரசாங்கத்தின் பொருளாதார வர்த்தக துறைசார்ந்த பிரதிநிதி களுடன் இருதரப்பு பேச்சுக்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் இலங்கை - சீன வர்த்தக மற்றும் முதலீட்டு மன்றத்தின் மாநாடு எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக பங்கேற்கும் சீன வர்த்தக அமைச்சருடன் 77 சீன நிறுவனங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் 115 வர்த்தகப் பிரதிநிதிகளும் பங்கேற்கவுள்ளனர்.

இந்த மாநாட்டின் ஊடாக இருதரப்பு வணிக உறவுகளை வலுப்படுத்தவும் வணிகத் தொடர்புகளை எளிதாக்கவும் மேலும் பல்வேறு துறைகளில் புதிய வர்த்தக மற்றும் முதலீட்டு வழிகளை அடையாளம் காணவும் முடியும் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

இயந்திரங்கள் மற்றும் மின்னணு பொருட்களின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கான சீன வர்த்தக சபை, உணவுப் பொருட்களின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கான சீன வர்த்தக சபை, பூர்வீக உற்பத்தி மற்றும் விலங்கு துணை தயாரிப்புகள், தனியார் துறைக்கான சீன சர்வதேச வர்த்தக சபை மற்றும் ஆடை இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கான சீன வர்த்தக சபை ஆகிய துறைகளை சார்ந்த சீன நிறுவனங்களின் பிரநிதிகள் இலங்கை பயணத்தில் பங்கேற்கின்றனர்.

எவ்வாறாயினும் தேயிலை, சாதிக்காய் மற்றும் கராம்பு போன்ற மசாலாப் பொருட்கள். நண்டு உள்ளிட்ட கடல் உணவுகள். பப்பாளி, அன்னாசி, கொய்யா மற்றும் மாம்பழம் போன்ற பழங்கள். அத்துடன் பிற உணவு மற்றும் விவசாயப் பொருட்கள் ஆகியவையை இலங்கையிலிருந்து இறக்குமதி செய்வதற்கான வாய்ப்புகள் குறித்து சீனப் பிரதிநிதிகள் குழு கொழும்பு பயணத்தின் போது ஆர்வம் செலுத்தவுள்ளது.

இலங்கைக்கான ஏற்றுமதியைப் பொறுத்தவரை சீன வணிகங்கள் உள்ளி, சீரகம், பெருஞ்சீரக விதைகள், பல்வேறு விவசாயப் பொருட்கள், உருளைக்கிழங்கு, காய்கறி பொருட்கள், ஆடை மற்றும் வீட்டு உபயோகப் பொருட்களை இலங்கை சந்தையில் அறிமுகப்படுத்த சீனப் பிரதிநிதிகள் குழு எதிர்பார்க்கின்றது.

மறுபுறம் நீர் சுத்திகரிப்பு, சுத்தமான எரிசக்தி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொழில்நுட்பங்கள், பொறியியல் மற்றும் கட்டுமானம் போன்ற துறைகளில் சாத்தியமான ஒத்துழைப்புகள் குறித்து ஆராயப்படவுள்ளது. வாகன உற்பத்தி இணைப்புகள், தேயிலைத் தோட்டம் மற்றும் தேயிலை நிறுவன மேம்பாடு ஆகியவற்றிலும் சீன குழு அவதானம் செலுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

# கொழும்பு மாநகர முதல்வர் பதவிக்கு கடும் போட்டி!

## ஜூன் 2 ஆம் திகதி தேர்தல்

கொழும்பு, மே19

உள்ளூராட்சி சபைகளில் அதிக கவனத்தை ஈர்த்துள்ள கொழும்பு மாநகர சபை முதல்வர் பதவிக்கான தேர்தல் களம் சூடுபிடித்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு மாநகர சபையின் முதல்வர் மற்றும் துணை முதல்வரை தெரிவு செய்வதற்கான தேர்தலை ஜூன் 2 ஆம் திகதி நடத்துவதற்கான ஏற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இருப்பினும், நாட்டின் முக்கியமான உள்ளூராட்சி நிறுவனமாகக் கருதப்படும் கொழும்பு மாநகர சபையில் அதிகாரத்தை கைப்பற்ற தேசிய மக்கள் சக்தி கட்சியால் 50 சதவீதம் வரம்பைத் தாண்ட முடியாத பின்னணியில் இது தொடர்பில் எதிர்க்கட்சிகள் கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றன.

அரசியல் கட்சிகள் கொழும்பு மாநகர சபையில் அதிகாரத்தை நிலைநாட்டுவதில் தங்கள் அதிகபட்ச ஆற்றல்களை வெளிப்படுத்தி வருவதால் இந்தத் தேர்தல் களம் சூடுபிடித்துள்ளதாக அரசியல் விமர்சகர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்த விவகாரம் தொடர்பில் அரசியல் கட்சிகளுக்கு இடையே ஏற்கனவே இரகசிய பேச்சுக்கள் தொடங்கிவிட்டதாகவும் சில சந்தர்ப்பங்களில் அரசியல் கட்சி உறுப்பினர்களை ஈர்க்க பல்வேறு சலுகைகள் மற்றும் வரப்பிரசாதங்களை வழங்க சில தரப்பினர் செயல்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சூழ்நிலையில் உள்ளூராட்சி ஆணையாளரால் நடத்தப்படும் தேர்தலில் 50இற்கும் அதிகமான வாக்குகளைப் பெறும் அரசாங்க அல்லது எதிர்க்கட்சி வேட்பாளர், கொழும்பு மாநகர சபையின் முதல்வராக தெரிவு செய்யப்படுவார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், கொழும்பு மாநகர சபையில் தேசிய மக்கள் சக்தி தனிக் கட்சியாக 48 ஆசனங்களை வென்றுள்ளது. இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க் கட்சிகள் 69 ஆசனங்களை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குற்ற கும்பல் தலைவனை நாடு கடத்த உத்தரவு

ரொறன்ரோ, மே 19



கனடாவிலிருந்து ஆவா குற்றக் கும்பல் தலைவனை நாடு கடத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸின் பாரிஸில் இடம்பெற்ற மோதல் தொடர்பில் கனடாவில் வைத்து கைது செய்யப்பட்ட குற்றக் கும்பலின் தலைவன் என நம்பப்படும் இலங்கையர் ஒருவரை பிரான்ஸூக்கு நாடு கடத்துமாறு கனடிய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் ஆவா கும்பலின் தலைவன் எனக் கூறப்படும் பிரசன்னா நல்லலிங்கம் என்ற அஜந்தன் சுப்பிரமணியம் என்பவர் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் கனடாவின் ரொறன்ரோவில் வைத்து கைது செய்யப்பட்டார்.

இவர் 2021 ஆம் ஆண்டு இலங்கையிலிருந்து தப்பிச் சென்று அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் கனடாவில் சட்டவிரோதமாக வசித்து வந்த நிலையில் அந்த நாட்டில் மனிதக் கொலைகள் உட்பட பல குற்றங்களுக்காக தேடப்பட்டவர் எனக் கூறப்படுகிறது.

2022 ஆம் ஆண்டு பிரான்ஸில் நடந்த ஒரு கொலை வழக்கில் சந்தேக நபரான இவர், கடந்த டிசெம்பரில் ரொறன்ரோவில் கைது செய்யப்பட்டு தற்போது தடுப்பு மையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதா கவும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலையில் பிரசன்னா நல்லலிங்கம் என்ற இலங்கையரை பிரான்ஸூக்கு நாடு கடத்துமாறு கனடாவின் ஒன்ராறியோ நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (எ)

கொட்டாஞ்சேனையில்

# இருவர்மீது துப்பாக்கிச்சூடு இருவர் பொலிஸில் சரண்!

கொழும்பு, மெ 19

கொட்டாஞ்சேனை பொலிஸ் பிரிவின் சுமித்ராராம மாவத்தை பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஆண் ஒருவரும் பெண் ஒருவரும் படுகாயமடைந்த சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் குற்றத்துக்குப் பிறகு தப்பிச் சென்ற சந்தேக நபரும் குற்றத்துக்கு உதவிய மற்றொரு சந்தேக நபரும் நேற்று முன்தினம் இரவு கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்திலும், கொழும்பு வடக்கு குற்ற விசாரணை பணியகத்திலும் சட்டத்தரணிகள் மூலம் சரணடைந்த பின்னர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 17 மற்றும் 18 வயதுடையவர்கள் என்றும் கொழும்பு 13 ஐ சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கொட்டாஞ்சேனை பொலிஸாரும் கொழும்பு வடக்கு குற்றத் தடுப்பு விசாரணை பிரிவினரும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். கடந்த 16 ஆம் திகதி, கொட்டாஞ்சேனை பொலிஸ் பிரிவின் சுமித்ராராம மாவத்தை பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரால் இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருந்தது. (எ)

பல மாவட்டங்களுக்கு

# மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, மே 19

நாட்டில் தொடர்ந்து பெய்து வரும் கன மழையை அடுத்து பல மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கையை விடுக்க தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

எனவே, அவதானத்துடன் இருக்குமாறு அந்த நிறுவனம் எச்சரிக்கை அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இதன்படி, கொழும்பு மாவட்டத்தில் சீதாவக்க, காலி மாவட்டத்தில் எல்பிட்டிய, களுத்துறை மாவட்டத்தில் பாலிந்தநுவர மற்றும் இங்கிரிய, கண்டி மாவட்டத்தில் பஸ்பாகே கோரலே, கேகாலை மாவட்டத்தில் புலத்கோஹூபிட்டிய, ருவன்வெல்ல, தெஹியோவிட்ட மற்றும் வரகாபொல, இரத்தினபுரி மாவட்டத்தில் எஹெலிய கொட, கிரியெல்ல மற்றும் குருவிட்ட ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு இந்த எச்சரிக்கை அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த எச்சரிக்கை அறிவிப்பு நேற்றுக் காலை 10.00 மணி முதல் இன்று காலை 10.00 மணி வரை அமுலில் இருக்கும் என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. (எ)

# 75 இலட்சம் ரூபாய் பெறுமதியான சிகரெட்களுடன் வர்த்தகர் கைது

கொழும்பு, மே 19

சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட 75 இலட்சம் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்களுடன் வர்த்தகர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய சுங்க அதிகாரிகளால் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டி - கம்பளை பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயது வர்த்தகரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர் டுபாயிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இதன்போது, விமான நிலைய சுங்க அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கொண்டு வந்த பயணப்பொதிகளிலிருந்து 50, 000 வெளிநாட்டு சிகரெட்கள் அடங்கிய 250 சிகரெட் பெட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# ரயில் நிலைய அதிபர்களின் வேலைநிறுத்தம் நிறைவு

கொழும்பு, மே 19

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ரயில் நிலைய அதிபர்கள் முன்னெடுத்த அடையாள வேலைநிறுத்தம் நேற்று முன்தினம் நள்ளிரவுடன் முடிவுக்கு வந்தது.

இதன்படி, நேற்றுக் காலை முதல் ரயில் சேவைகள் வழக்கம் போன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன தெரிவித்தார்.

பல கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு, ரயில் நிலைய அதிபர்கள் கடந்த 16 ஆம் திகதி நள்ளிரவு முதல் 24 மணி நேர அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட தீர்மானித்தனர்.

இந்த வேலைநிறுத்தம் காரணமாக தினசரி ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டதுடன் நேற்று முன்தினம் இரவும் இரவு நேர தபால் ரயில் சேவைகளும் நிறுத்தப்பட்டன.

எவ்வாறாயினும், தங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் எதிர்காலத்தில் தொடர்ச்சியான வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவோம் என்று ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் தலைவர் எச்சரித்துள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடலுக்குள் செல்லும் இரணவில கரையோரம்



சிலாபம், மே 19

புத்தளம் - சிலாபம், இரண வில கடற்கரையின் 700 மீற்றர் பகுதி கடலரிப்புக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கரையோரப் பாதுகாப்பு மற் றும் கரையோர வள முகாமைத் துவ திணைக்களத்தின் விசேட குழுவினால் மேற்கொள்ளப் பட்ட விசேட ஆய்வின் போதே மேற்படி கடலரிப்பு தொடர்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி குழுவினர் சிலாபம், இரணவில கடற்கரையின் கடலரிப்பு பற்றி விரிவான விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளதாக கடலோர பாதுகாப்பு மற்றும்கடலோர வள முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டெர்னி பிரதீப் குமார குறிப்பிட்டார்.

மேலும், இந்த கடலரிப்பு காரணமாக ஏற்பட்டுள்ள சேதங்கள் தொடர்பில் மதிப்பிடும் பணிகளும் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக தெரிவித்த அவர், காலநிலை மாற்றம் இவ்வாறு கடலோர அரிப்பை அதிகரித் துள்ளது என்றும் கடலோர வள முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கூறினார்.

இவ்வாறு கடலரிப்புக்கு உள்ளான பகுதிகளுக்கு மணல் மூடைகளை பயன்படுத்தி அரிப்பை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (எ)

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கொழும்பில் நேற்று இடம்பெற்றது



கொழும்பு, மே 19

தமிழின அழிப்பை நினைவுகூரும் வகையில் கொழும்பில் நேற்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றது.

2009ஆம் ஆண்டு போரின் இறுதியில் நிகழ்ந்தேறிய மனிதப் பேரவலத்தை நினைவுகூரும் வகையில் ஆண்டுதோறும் மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு உணர் வெழுச்சியுடன் முன்னெடுக்கப் பட்டு வருகின்றது.

அந்தவகையில் இம்முறையும் 16 ஆம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு, வடக்கு- கிழக்கு மற்றும் கொழும்பில் பல்வேறு நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்ட நிலையில் நேற்றுக் காலை கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு இடம் பெற்றது. (எ)

# ஜனாதிபதி நிதியத்தின் சேவைகளை விரிவுபடுத்த அரசாங்கம் நடவடிக்கை

### ஜனாதிபதியின் செயலாளர் நந்திக தெரிவிப்பு



கொழும்பு, மே 19

ஜனாதிபதி நிதியத்தின் சேவைகளை தேவையுள்ள நோயாளிகளுக்காக மேலும் விரிவுபடுத்த அர்ப்பணிப்போம் என்று ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி நிதியத்தின் சேவைகளை பிரதேச மட்டத் துக்கு விரிவுபடுத்தும் நடவடிக்கையின் கீழ், மேல் மாகாணத்தின் பிரதேச செயலகங்களுக்குப் பொறுப்பான அதிகாரிகளுக்கான விசேட பயிற்சி செயலமர்வு நேற்று முன்தினம் ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்றது.

கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்டங்களை உள்ளடக்கிய மேல் மாகாணத்தின் அனைத்து பிரதேச செயலகங்களிலும் நிதியத்தின் செயல்பாடுகளை நேரடியாக மேற்கொள்ளும் அதிகாரிகளுக்கு, நடைமுறை மற்றும் தொழில்நுட்ப அறிவை வழங்கும் நோக்கில் இந்தச் செயலமர்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி ஊடக ஆலோசகர் சந்தன சூரிய பண்டார, அரச அதிகாரிகள் மற்றும் பொதுமக்களுக்கிடையில் சிறந்த தொடர்பாடலை உருவாக்கும் முறைகள் குறித்து விரிவாக விளக்கினார்.

மருத்துவ உதவி விண்ணப்ப செயல்முறைகள், கணினி கட்டமைப்பின் பாதுகாப்பு மற்றும் பயன்பாடு, பிரச்னை தீர்வுகள் உள்ளிட்ட பல விடயங்களை உள்ளடக்கிய பயிற்சிகள், அதிக்காரிகளுக்கு வழங்கப்பட்டன.

ஜனாதிபதி நிதியின் சேவைகள் தற்போது பிரதேச மட்டத்துக்கு விரிவுபடுத்தப் பட்டுள்ளதால், அதிகமான மக்களுக்கு இந்த நிதியின் சேவைகளை எளிதாகக் கிடைக்கச் செய்ய முடிந்துள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் தெரிவித் துள்ளார்.

மிகவும் தேவையுள்ளவர்களுக்கு சேவைகளை வழங்குவதே ஜனாதிபதி நிதியின் முக்கிய நோக்கம். இந்த சேவையின் மதிப்பை அரசாங்க அதிகாரிகள் புரிந்துகொண்டு, மக்களுக்காக ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகே தெரிவித்ததாவது, தற்போதுவரை ஆயிரத்துக்கும் மேற்பட்ட மருத்துவ உதவிக்கான விண்ணப்பங்கள் கணினி கட்டமைப்பில் பதிவாகியுள்ளன. இவற்றில் 40 சதவீதம் மேல் மாகாணத்தைச் சேர்ந்த பிரதேச செயலகங்களில் இருந்து சமர்ப்பிக்கப்பட் டுள்ளன.

2025 பெப்ரவரி 7 ஆம் திகதி முதல் பிரதேச செயலகங்களுக்கு விரிவுபடுத்தப்பட்ட இந்த சேவையின் கீழ், தற்போது பெறப்படும் விண்ணப்பங்களில் 80 சதவீதம் பிரதேச செயலகங்கள் மூலமாகவே கிடைக்கின்றன எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

இந்த நிகழ்வில் பங்கேற்ற அதிகாரிகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன், ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர்கள் பி.எச். கொலம்பகே, பி.ஆர். பிரசாத் பெரேரா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (எ)

# சுகாதார அமைச்சர் நளிந்த சுவிற்சர்லாந்துக்கு பயணம்



கொழும்பு, மே 19

உலக சுகாதார அமைப்பின் 78ஆவது வருடாந்திர பொதுக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை சுவிஸ்சற்லாந்துக்கு பயணமானார்.

இந்த மாநாடு இன்று 19 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை சுவிற்சர்லாந்தின் ஜெனிவாவில் நடைபெறும். இதன் கருப்பொருள் ஒரு சுகாதாரமான உலகம். இந்த ஆண்டு மாநாட்டில் உலக சுகாதார அமைப்பில் உறுப்பினர்களாக உள்ள அனைத்து நாடுகளைச் சேர்ந்த சுகாதார அமைச்சர்கள் கலந்து கொள்வார்கள். மேலும் அந்த நாடுகளைச் சேர்ந்த சுகாதாரத் துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரசு அதிகாரிகளும் இந்த மாநாட்டில் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாநாட்டில் கலந்து கொள்ளும் அனைவரின் பங்கேற்புடனும் ஒரு விரிவான கலந்துரையாடல் திட்டமிடப்பட் டுள்ளது. மேலும், முன்வைக்கப் படும் திட்டங்கள், யோசனைகள் மற்றும் ஆராய்ச்சி தரவுகளின் அடிப்படையில் வரும் ஆண்டில் உலகம் முழுவதும் சுகாதார நிலைமைகளை மேம்படுத்த தேவையான ஏற்பாடுகள் மற்றும் முடிவுகள் எடுக்கப்படும்.

மேலும் இதற்கேற்ப எதிர் காலத் திட்டங்கள் தயாரிக்கப்படும். சுகாதார அமைச்சரைத் தவிர, அந்த அமைச்சின் செயலாளர் அனில் ஜாசிங்க, ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர பிரதிநிதி ஹிமாலி அருணதிலக, ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் முதல் செயலாளர் நிஷாந்தினி விக்டர் உள்ளிட்ட அதிகாரிகள் குழுவும் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி இந்த மாநாட்டில் பங்கேற்கவுள்ளனர். (எ)

# துசிதவின் கார் மீது துப்பாக்கிச்சூடு விசாரணை சி.ஐ.டியிடம் ஒப்படைப்பு

கொழும்பு, மே 19

தேசிய லொத்தர் சபையின் முன்னாள் பணிப்பாளர் துசித ஹல்லோலுவ பயணித்த காரை இலக்கு வைத்து நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பான விசாரணை கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவிடம் ஒப்படைக்கப்பட் டுள்ளது.

பதில் பொலிஸ்மா அதிபரின் உத்தரவின் பேரில், இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணை கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவிடம் ஒப்படைக்கப்பட் டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)




பிரிட்டனின் சவுத்என்டில் வசிக் கும் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழர்கள் முள்ளிவாய்க்கால் இன அழிப்பின் 16 ஆவது ஆண்டை நினைவுகூர்ந்து நேற்று அஞ்சலி செலுத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் மருத்துவமனை முன்பு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்




மன்னார், மே 19

மன்னாரில் தமிழீழ விடுதலை இயக்கம் - ரெலோ ஏற்பாடு செய்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனை முன்பு நடைபெற்றது.

இதன்போது முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்த உறவுகளை நினைவு கூர்ந்து சுடர் ஏற்றப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதனைத்தொடர்ந்து முள்ளிவாய்க்கால் நினைவு கஞ்சி பகிரப்பட்டது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் ரெலோவின் மாவட்ட அமைப்பாளர் டானியல் வசந்தன் , ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் எஸ். ஆர். குமரேஸ், ரெலோவின் பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ)

# சமிக்ஞை கோபுரத்தில் ஏறி அரச ஊழியர் போராட்டம்

கொழும்பு, மே 19

ஓய்வுபெற்ற ரயில்வே கட்டுப்பாட்டாளர் ஒருவர், சமிக்ஞை கோபுரத்தில் ஏறி தனது கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று ஞாயிற்றுக்கிழமை போராட்ட மொன்றை முன்னெடுத்துள்ளார்.

கொழும்பு மருதானை ரயில் நிலைய வளாகத்தில் அமைந்துள்ள சமிக்ஞை கோபுரத்தில் ஏறியே குறித்து போராட்டத்தை முன்னெடுத்துள்ளார்.

# துப்பாக்கிச்சூட்டில் 30 பேர் உயிரிழப்பு

கொழும்பு, மே 19

கடந்த 5 மாதங்களில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களில் 30 பேர் கொல்லப்பட்டனர். அத்துடன், 22 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தக் காலப்பகுதியில் 43 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவற்றில் 29 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்ளால் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். (ஐ)

அதிசொகுசு வாகனங்கள் ஏலம்:

# சமூக ஊடகங்களில் பரவும் தகவல்கள் உண்மையல்ல!

கொழும்பு, மே 19

ஜனாதிபதி பணிமனைக்கு சொந்தமான அதி சொகுசு வாகன ஏலத்தின் இரண்டாவது கட்டமாக சொகுசு வாகனங்கள் மற்றும் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட வாகனங்கள் விற்பனை செய்யப்பட்டமை தொடர்பில் சமூக ஊடகங்களில் பரவி வரும் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தால் மதிப்பிடப்பட்டதை விடவும் அதிக விலைகளை சமர்ப்பித்த ஏல விண்ணப்பதாரர்களுக்கு வாகனங்களை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழங்கப்பட்ட 26 வாகனங்களில், 17 வாகனங்கள் அரசாங்கத்தின் உத்தியோகப்பூர்வ மதிப்பீடுகளை விட அதிக விலைக்கு ஏலம் கோரியவர்களுக்கு விற்பனை செய்யப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், குறைந்தபட்ச மதிப்பீட்டை எட்டாத காரணத்தினால் ஒன்பது வாகனங்கள் விற்பனை செய்யப்படவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஏல செயன்முறையினூடாக வாகன விற்பனை குறித்த பல்வேறு செய்திகளை உருவாக்கி விளம்பரப்படுத்த ஒழுங்கமைக்கப்பட்ட குழுவொன்று செயற்பட்டு வருவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சமூக ஊடகங்களில் வெளியாகும் தகவல்கள் உண்மைக்குப் புறம்பான செய்திகள் என்றும், அவற்றுக்கு எதிராக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடளிக்கவுள்ளதாகவும் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஆண்டு தொடக்கத்தில் இருந்ததைவிட மின் கட்டணம் குறைவாகவே இருக்கும்

**இலங்கை மின்சார சபை விசேட அறிக்கை**

கொழும்பு, மே 19

முன்மொழியப்பட்ட புதிய மின்சாரக் கட்டண திருத்தத்துக்கு அமைய கட்டணம் அதிகரித்தாலும் அது இந்த ஆண்டின் தொடக்கத்தில் நடைமுறையில் இருந்த மின்சார கட்டணத்தை விடக் குறைவாகவே இருக்கும் என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

2025 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதிக்கான மின்சாரக் கட்டணங்களை திருத்துவது தொடர்பான முன்மொழிவை பொதுப் பயன்பாட்டு ஆணைக் குழுவிடம் சமர்ப்பித்த பின்னணியில் அறிக்கை ஒன்றை வெளியிட்டு மின்சார சபை இதனைத் தெரிவித்துள்ளது.

மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் தம்மிக விமலரத்ன வெளியிட்டுள்ள அறிக்கையில், முன்மொழியப்பட்ட புதிய திருத்தத்தின்படி மின்சாரக் கட்டணம் அதிகரிக்கும் என்றாலும், இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்த மின்சாரக் கட்டணத்தை விட இது குறைவாகவே இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2014 - 2022 கால கட்டத்தில் மின்சார உற்பத்தி, பரிமாற்றம் மற்றும் விநியோகத்துக்கான செலவுகள் அதிகரித்த போதிலும், மின்சாரக் கட்டணங்களில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்றும், அந்தக் காலகட்டத்தில் எரிபொருள் விலைகள், நிலக்கரி, உதிரிப் பாகங்கள் மற்றும் பராமரிப்பு செலவுகளும் தொடர்ந்து அதிகரித்தன என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதிகரித்த செலவுகளின் முழுச் சுமையும் இப்போது கடன் நெருக்கடியாக அதிகரித்துள்ளதால், சபை பெரிய அளவிலான கடன்களை எடுத்து விநியோகஸ்தர்களுக்கு பணம் செலுத்துவதை ஒத்திவைக்க வேண்டியுள்ளது என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதன்படி, முன்மொழியப்பட்ட மின்சாரக் கட்டண திருத்தம், அத்தியாவசிய செலவுகளை படிப்படியாக ஈடுகட்டுதல், கடன் நெருக்கடியை நிர்வகித்தல் மற்றும் விநியோகஸ்தர்களுக்கு சரியான நேரத்தில் பணம் செலுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

எதிர்கால வலுசக்தி பாதுகாப்பை பாதிக்காமல், அனைத்து இலங்கையர்களுக்கும் பாதுகாப்பான, நம்பகமான மற்றும் தடையற்ற மின்சார விநியோகத்தை வழங்க உதவுவதே இதன் முதன்மை நோக்கமாகும்.

பொதுமக்களுக்கு மிகவும் மலிவு விலையில் மின்சாரத்தை வழங்குவதும், குறைந்த விலை வலுசக்தியை அறிமுகப்படுத்தி, நீண்டகால சீர்திருத்தங்கள் மூலம் செயல்திறனை அதிகரித்து செலவுகளைக் குறைத்து எரிசக்தித் துறையை வலுப்படுத்துவதே இலங்கை மின்சார சபையின் நோக்கம் என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# மத்திய மாகாண சபை போக்குவரத்து அதிகார சபை தலைவர் இராஜினாமா

கொழும்பு, மே 19


மத்திய மாகாண சபையின் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை தலைவர் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்பே ஏ.கே. இவங்கேஸ்வர என்பவருக்கு மேற்படி நியமனம் வழங்கப்பட்டது. இவர் ஓய்வு பெற்ற உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஆவார்.

இவர் இராஜினாமா கடிதத்தை மத்திய மாகாண ஆளுநர் சரத் அபேகோனிடம் கையளித்துள்ளதாக ஆளுநர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் கீழ் கண்டி, மாத்தளை, நுவரெலியா மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 3000 தனியார் பேருந்துகள் பதிவு செய்யப்பட்டு அவை தொடர்பான வழிகாட்டல் மற்றும் முகாமை என்பன இவ் அதிகார சபையாலே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (எ)

# யால தேசிய பூங்காவில் மேலும் சில வலயங்கள்




கொழும்பு, மே 19

யால தேசிய வனவிலங்கு பூங்காவில் மேலும் சில வலயங்களை சுற்றுலா பயணிகளுக்காக திறப்பதற்கு சுற்றாடல் அமைச்சு தீர்மானித்துள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் நெரிசலை கையாள்வதற்காகவே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள் ளதாக அமைச்சர் தம்மிக்க படபெந்தி தெரிவித்தார்.

அரன்கமுவ எனும் பெயரில் புதிய வலயமொன்றும் தற்போது மூடப்பட்டுள்ள 3ஆம், 4ஆம் வலயங்களையும் உடனடியாக திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

குறித்த பகுதிகளில் சலுகைகளை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஒரு இலட்சம் ஹெக்ரெயர் பரப்பளவு கொண்ட யால தேசிய பூங்காவில் 25 ஆயிரம் ஹெக்ரெயர் பகுதி மாத்திரமே சுற்றுலா பயணிகளுக்காக திறக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வீசா காலாவதியான இலங்கையருக்கு பொது மன்னிப்பு வழங்க வேண்டும்!

கொழும்பு, மே 19


வீசா காலாவதியானதால் பல்வேறு சிரமங்களை எதிர் கொள்ளும் இலங்கையர்களுக்கு பொது மன்னிப்பு காலம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இலங்கைக்கான இஸ்ரேல் தூதுவரிடம் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அமைச்சரின் கோரிக்கையை இஸ்ரேல் அரசாங்கத்திடம் துரிதமாக முன்வைக்க நடவடிக்கை எடுப்பதாக இலங்கைக்கான இஸ்ரேல் தூதுவர் ஒப்புக் கொண்டாரென வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இஸ்ரேலில் பல்வேறு துறைகளில் தற்போது பெருமளவான இலங்கையர்கள் பணியாற்றி வருவதாகவும் இலங்கையர்களுக்கு அதிக தொழில்வாய்ப்புகளை வழங்க இஸ்ரேல் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருவதாகவும் இலங்கைக்கான இஸ்ரேலிய தூதுவர் இதன்போது தெரிவித்த தாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன அழிப்பு நினைவுத் தூபியால் மட்டக்களப்பில் பெரும் பரபரப்பு



மட்டக்களப்பு, மே 19

**மட்டக்களப்பு-கல்லடி பாலத்துக்கு அருகாமையிலுள்ள வாவியில் தமிழின அழிப்பு நாளை முன்னிட்டு நினைவு கூர்ந்து முள்ளிவாய்க்கால் தூபியின் புகைப்படம், கறுப்பு, சிவப்பு மற்றும் மஞ்சள் கொடிகள் மற்றும் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட தூபி போன்ற அமைப்பு நேற்று முன்தினம் சனிக் கிழமை இரவு மிதந்து வந்ததையடுத்து அங்கு பெரும் பர பரப்பு ஏற்பட்டது.**

வாவி ஊடாக சம்பவதின மான சனிக்கிழமை இரவு 09.00 மணியளவில் மின் விளக்குகள் ஒளிர்ந்து கொண்ட நிலையில் மிதக்கும் வகையிலான இன அழிப்பின் நினைவாக அமைக் கப்பட்ட தூபி மிதந்து முகத் துவாரத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.


இரவில் மின்விளக்குகள் ஒளிர்ந்த வண்ணம் மனிதர்கள் இன்றி ஒரு சிறிய படகு போல மர்மமான பொருள் வாவியில் மிதப்பதை மக்கள் கண்டதைய டுத்து அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதனையடுத்து அங்கு வந்த புலனாய்வுப் பிரிவினர், பொலி ஸார் இணைந்து அதனை மீட்ப தற்கான நடவடிக்கையை முன் னெடுத்த நிலையில், அந்த மர்மமான படகு முகத்துவாரம் நோக்கி நகர்ந்து டச்பார் பகுதி வாவிக்கரையில் அமைந்துள்ள மீன்பிடிப்படகு தயாரிக்கும் கட்டட பகுதியில் கரை யொதுங்கியது. அங்கு சென்ற பொலிஸார் அதனைக் கரைக்கு இழுத்து கொண்டு வந்து மீட் டனர்.

சுமார் 4 அடி கொண்ட சது ரமான றெஜிபோமில் நடுவில் முள்ளிவாய்க்காலில் அமைந் துள்ள நினைவுத் தூபி போன்ற புகைப்படம் வைக்கப்பட்டு, அதில். "தலைமகனின் வீர வணக்க நாள், இன அழிப்பு வாரம் 12 வைகாசி முதல் 17 வைகாசி வரை, பொங்கு தமிழ் பேரவை" என வாசகம் பொறிக் கப்பட்டு அதற்கு அருகில் கறுப்பு ,சிவப்பு, மஞ்சள் கொடி கள் ஏற்றப்பட்டு அதனைச் சுற்றி மெழுகுதிரி போன்ற வடிவி லான முன்விளக்குகள் ஒளிர விட்டு மிதக்கும் முறையில் தயாரிக்கப்பட்டு வாவியில் விடப்பட்டுள்ளது.

வாவியில் மிதக்கும் வகை யில் அமைக்கப்பட்ட இந்த நினைவுத் தூபியை யார் அமைத்து, இதனை எங்கி ருந்து வாவியில் விட்டார்கள் எனத் தெரியாது. இது தொடர் பில் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் பொலிஸார் திக்குமுக் காடியதோடு, மீட்கப்பட்ட அந்த மிதக்கும் நிலையில் அமைக்கப்பட்ட இன அழிப்பு தூபியை பொலிஸ் நிலையத் துக்கு கொண்டு சென்றனர். (எ)

# மட்டு. மேற்கு வலயத்தின் சாதனையாளர் கௌரவிப்பு




மட்டக்களப்பு, மே 19

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய சாதனையாளர் பாராட்டு நிகழ்வு நேற்றுமுன்தினம் குறிஞ் சாமுனை சக்தி வித்தியாலயத் தில் நடைபெற்றது.

வலயக் கல்விப் பணிப்பா ளர் யோ. ஜெயசந்திரன் தலை மையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் மாவட் டத்தில் வெட்டுப் புள்ளிகளை பெற்ற மாணவர்கள், சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறு பேறுகளை பெற்ற மாண வர்கள், உயர்தர பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக் கழகத்துக்கு தெரிவான மாண வர்கள், தமிழ்மொழித்தினம், விளையாட்டு, சமூக விஞ்ஞா னம், அழகியல் போன்ற பல் வேறு துறைகளில் தேசிய, மாகாண மட்டங்களில் சாதித்த சாதனையாளர்கள் 384 பேர் பரி சுகள் வழங்கிக் கௌரவிக்கப் பட்டனர்.

இதன்போது, தேசிய மட்ட பரீட்சைகளில் சிறந்த பெறு பேறு களை வெளிப்படுத்திய பாடசா லைகளின் அதிபர்களும் கௌர விக்கப்பட்டிருந்தனர். (ஐ)

# நினைவேந்தல் பதாதையை பறித்து சென்ற பொலிஸார்!



திருகோணமலை, மே 19

சம்பூரில் அனுஷ்டிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவேந் தல் நிகழ்வில் கட்டப்பட்டிருந்த பதாதையை பொலிஸார் பறித் துச் சென்றனர் என்று தெரிவிக் கப்பட்டது.

சம்பூர் - கடற்கரைச்சேனை பகுதியில் நேற்று முன்தினம் முள்ளிவாய்க்கால் நினைவேந் தல் நிகழ்வு நடைபெற்றது. தமிழ் அரசு கட்சியின் மூதூர் கிளையின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நினைவேந்தல் நிகழ்வு ஆரம் பமானபோது அங்கு வந்த சம் பூர் பொலிஸார் அங்கு காட்சிப் படுத்தப்பட்டிருந்த பதாதையை அகற்றுமாறு கூறினர். பதாதையில் கார்த்திகை மலர் உள்ளது அது விடுதலை புலி களை நினைவுகூருவது எனவே அதனை அகற்ற வேண்டும் என்று கூறியதுடன், தாமே பதா தையையும் அகற்றவும் முனைந்தனர்.

இதையடுத்து, நினை வேந்தல் ஏற்பாட்டாளர்களுக் கும் பொலிஸாருக்கும் இடையே தர்க்கம் ஏற்பட்டது.

எனினும், பின்னர் பதாதையை பொலிஸார் அங்கிருந்து எடுத் துச் சென்றனர். அதன் பின்னர் நினைவேந்தல் நிகழ்வு நடை பெற்றது. (ஐ)

# பல்கலைக்கழகத்துக்கு தெரிவான மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்



மட்டக்களப்பு, மே 19

மட்டக்களப்பு மகிழவட்ட வான் மகா வித்தியாலயத்தில் கடந்த 2024 க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் சித்தி பெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரி வான மாணவர்கள் கௌர விக்கப்பட்டனர்.

மகிழவட்டவான் இந்து இளைஞர் மன்றத்தின் அனுசர ணையில் ஆசிரியர் சி. குலேந்தி ரன் ஒழுங்கமைப்பில் பாட சாலை அதிபர் ம. கருணாதாசன் தலைமையில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, மாணவர்கள் பதக்கங்கள், நினைவுச்சின்னங் கள் வழங்கி கௌரவிக்கப்பட் டனர். இதன்போது, அவர்க ளுக்குக் கற்பித்த ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர். (ஐ)

# வீட்டை உடைத்து கொள்ளையடித்தவர் பொலிஸாரிடம் மாட்டினார்

கல்முனை, மே 19

அம்பாறை, பெரியநிலாவணை பொலிஸ் பிரிவில் வீட்டின் கதவை உடைத்து 16 இலட் சத்து 24,ஆயிரம் ரூபாய் பெறு மதியான தங்க நகைகளை கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் மருதமுனை பகுதியில் வைத்து சந்தேகநபர் கைது செய்யப்பட் டுள்ளதாக பொலிஸார் தெரி வித்தனர்.

கடந்த 16 ஆம் திகதி இடம் பெற்ற இந்தக் கொள்ளைச் சம்ப வத்தின் போது கொள்ளையி டப்பட்டிருந்த மூன்று தங்க வளையல்கள், கைச்சங்கிலி, இரண்டு தோடுகள் மற்றும் இரண்டு மோதிரங்களை பொலிஸார் மீட்டுள்ளனர். (எ)

# விசேட போக்குவரத்து பொலிஸார் கல்முனையில் திடீர் சோதனை!

கல்முனை, மே 19

கல்முனையில் விசேட போக்குவரத்து பொலிஸார் திடீர் சோதனை நடவடிக் கையை நடத்தியுள்ளனர்.

நேற்று மாலை முதல் இந்த திடீர் சோதனை நடவடிக்கை கல்முனை புறநகர் முதல் சாய்ந்தமருது புறநகர் கடற்கரை வீதி போன்ற இடங்களில் முன்னெடுக்கப்பட்டது.

இந்த திடீர் சோதனையில் சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்தியமை தலைக வசம் அணியாமல் பயணித் தமை, ஒரு மோட்டார் சைக்கி ளில் இருவருக்கு அதிகமான வர்கள் பயணித்தமை, அதிவே கமாக சென்றமை, அதிகஒலி எழுப்பிய மோட்டார் சைக் கிள்கள் கண்காணிக்கப்பட்டு தண்டப்பணம் விதிக்கப்பட் டது. இவ்வாறு, 82 பேருக்கு தண்டப்பணம் விதிக்கப்பட் டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த சோதனை நடவடிக்கையானது அம்பாறை மாவட்ட கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம். கே. இப்னு அஸார் வழிகாட்டலில் நடைபெற்றது. (ஐ)

# கொழும்பு தமிழ் மாணவி மரணம் மட்டக்களப்பு அரச அதிபருக்கு மனு

மட்டக்களப்பு, மே 19

கொழும்பு கொட்டாஞ் சேனை தமிழ் மாணவியின் மரணம் போன்று இன்னொரு மாணவிக்கு நேர்ந்து விடக் கூடாது. இது தொடர்பில் துரித சட்ட நடவடிக்கைகள் அவசியம் என்று வலியுறுத்தி மட்டக்களப்பு மாவட்ட அர சாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரனிடம் மனித உரிமை கள், பெண்ணியம்சார் செயல் பாட்டாளர்கள் மனு ஒன்றை கையளித்துள்ளனர்.

கொட்டாஞ்சேனை தமிழ் மாணவிக்கு ஏற்பட்ட நிலைமை இன்னுமொரு பிள்ளைக்கு ஏற்படுவதற்கு முன்னர் இவ்வா றான செயல்பாடுகளுக்கு எதிராக துரித சட்ட நடவடிக் கைகள் மேற்கொண்டு கடுமை யானதாக தண்டனைகள் வழங் கப்பட வேண்டும் என்று அந்த மனுவில் வலியுறுத்தப் பட்டுள் ளது.

கொட்டாஞ்சேனை தமிழ் மாணவியின் மரணத்துக்கு நீதி கோரி கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை பிரதேசங்க ளில் செயல்படும் மனித உரிமைகள், பெண்ணியம்சார் செயல்பாட்டாளர்கள், தனிமனிதர்கள் இணைந்து கடந்த 11ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர் என்ப தும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரச்னைகளை தீர்ப்பதற்கு இந்தியாவுடன் பேச தயார்!

## பாகிஸ்தான் அறிவிப்பு



இஸ்லாமாபாத், மே 19

காஷ்மீர் உள்ளிட்ட அனைத்து சர்ச்சைக்குரிய பிரச்னைகளுக்கும் தீர்வு காண இந்தியாவுடன் ஒருங்கிணைந்த பேச்சு நடத்த பாகிஸ்தான் தயாராக உள்ளது - இவ்வாறு பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சரும், துணை பிரதமருமான இஷாக் தர் விருப்பம் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் செனட் உறுப்பினர்களிடையே உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், “இந்தியாவுடனான போர் நிறுத்த ஒப்பந்தம் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஆனால், அனைத்து பிரச்னைகளையும் பேசித் தீர்க்க அரசியல் செயல்முறை அவசியம். பாகிஸ்தானுக்கு வரும் தண்ணீரை தடுத்து நிறுத்தும் வகையில் சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை இந்தியா தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது. சிந்து நதி நீரை தடுக்கும் எந்தவொரு முயற்சியும் போர் நடவடிக்கையாகவே கருதப்படும்” என்றார்.

இதனிடையே பாகிஸ்தான் பிரதமர் ஷெஹபஸ் ஷெரீபும் இந்தியாவுடன் அமைதிப் பேச்சுக்கு தயாராக இருப்பதாக கூறியுள்ளார்.

இதேநேரம், பாகிஸ்தானுடனான எந்தவொரு பேச்சும் எல்லை தாண்டிய பயங்கரவாதம் குறித்ததாக மட்டுமே இருக்கும்.

ஒப்படைக்க வேண் டிய பயங்கரவாதிகளின் பட்டி யல் பாகிஸ்தானிடம் உள்ளது. அவர்கள் பயங்கரவாதிகளின் கட்டமைப்பை மூட வேண்டும். இந்தியா பாகிஸ்தான் பிரச்னையில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் செய்வதற்கு எந்த வாய்ப்பும் இல்லை என்று இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 10 இலட்சம் பலஸ்தீனர்களை வெளியேற்ற ட்ரம்ப் திட்டம்?

டெல் அவிவ், மே 19

10 இலட்சம் பலஸ்தீனர்களை நிரந்தரமாக லிபியாவில் குடியமர்த்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் திட்டமிட்டுள்ளார்.

இது தொடர்பில், லிபிய அரசாங்கத்துடன் அமெரிக்கா பேச்சு நடத்தி வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேல் மீது கடந்த 2023 ஒக்ரோபர் 7ஆம் திகதி தாக்குதல் நடத்தியது. இதைத் தொடர்ந்து இஸ்ரேல் ஹமாஸை அழிக்கும் நோக்கில் காசா மீது போர் தொடுத்தது. இதில், 53 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் உயிரிழந்தனர். இந்த நிலையில், காசாவை முற்றுகையிடும் நோக்கில் கடந்த வெள்ளிக்கிழமை இஸ்ரேல் பெருமெடுப்பிலான போர் நடவடிக்கையை ஆரம்பித்தது.

இதனிடையே, காஸா முனையிலிருந்து பலஸ்தீனர்



களை வெளியேற்றிவிட்டு அதை அமெரிக்காவின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர ஜனாதிபதி ட்ரம்ப் முன்மொழிந்தார்.

அவரின் அறிவிப்புக்கு பல்வேறு தரப்பினரும் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். எனினும், ட்ரம்பின் முடிவுக்கு இஸ்ரேல் ஆதரவு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், காசாவின் பலஸ்தீனர்களில் 10 இலட்சம் பேரை லிபியாவில் நிரந்தரமாக குடியமர்த்த ட்ரம்ப் திட்டமிட்டுள்ளார். இதற்காக அந்த நாட்டு அரசாங்கத்துடன் பேச்சு நடத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# யேமன் துறைமுகங்கள்மீது இஸ்ரேல் வான்வழி தாக்குதல்!

சனா, மே 19

யேமனின் துறை முகங்களை இலக்கு வைத்து இஸ்ரேல் வான்வழி தாக்கு தல்களை நடத்தியுள்ளது.

ஹூடைடா, அஸ் சலிப் நகரங்களில் உள்ள துறை முகங்கள்மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட் டுள்ளது. இந்தத் தாக்குதலின் இழப்புகள் குறித்து தெரிய வரவில்லை.

ஹமாஸுக்கு ஆதரவு அளிப்பதற்காக இஸ்ரேலுக்கு எதிராக அரபிக்கடல், செங்கடலில் செல்லும் சரக்கு கப்பல்களை குறிவைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்துகின்றனர். அத்துடன், இஸ்ரேல் மீதும் வான்வழி தாக்குதல்களை அந்த அமைப்பு நடத்துகிறது. இதற்கு பதிலடியாகவே, இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இஸ்ரேல் - ஹமாஸ் போரில் தற்போது வரை 53 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இந்த நிலையில், ஹமா ஸுக்கு ஆதர வாக இஸ்ரேல் மீது யேமனி லுள்ள ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் களை நடத்தி வருவது தெரிந்ததே. (ஐ)

# இஸ்ரேல் - ஹமாஸ் இடையே புதிய சமரச பேச்சு ஆரம்பம்!

## காசாமீதான தாக்குதலில் 164 பேர் பலி!

டெல்அவிவ், மே 19

**தரை, வான், கடல் வழிகளில் இஸ்ரேல் தொடங்கிய பெரும் தாக்குதலையடுத்து காசா போரை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் புதிய சுற்று பேச்சுகள் ஆரம்பமாகியுள்ளன என்று ஹமாஸ் தெரிவித்துள்ளது.**

டோகாவில் இந்தப் பேச்சுகள் அதிகாரபூர்வமாக ஆரம்பித்துள்ளன என்று ஹமாஸ் தலைவரின் ஆலோசகரான தாஹர் அல் நௌனௌ தெரிவித்தார். மேலும், இரு தரப்புகளிலிருந்தும் எந்த முன்நிபந்தனைகளும் விதிக்கப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

காசாவின் மூலோபாய பகுதிகளை கைப்பற்றி பணயக் கைதிகளை விடுவிக்கும் தாக்குதலுக்கு படை திரட்டப்பட்டுள்ளது என்று இஸ்ரேல் இராணுவம் அதன் ஹீப்ரு எக்ஸ் கணக்கில் தெரிவித்ததைத் தொடர்ந்து சமரச பேச்சுக்கு இணக்கம் எட்டப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இதனிடையே, கடந்த வெள்ளிக்கிழமை இஸ்ரேல் படைகள் தரை, கடல் வான் வழிகள் மூலம் வடக்கு காசா மீது தாக்குதல்களை நடத்தியது. இந்தத் தாக்குதல்களில் 146 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்.


பலர் படுகாயம டைந்தனர் என்று உள்ளூர் சுகாதார அதிகாரிகளை மேற்கோள்காட்டி ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும், வடக்கு, மத்திய காசாவிலிருந்து மக்களை வெளியேறுமாறு இஸ்ரேல் உத்தர விட்டுள்ளது. அத்துடன், ஹமாஸ் அமைப்பினரின் 150 இலக்குகளை கடந்த வெள்ளிக்கிழமை தாம் தாக்கி அழித்ததாகவும் இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இதேவேளை, 11ஆவது வாரமாக தொடரும் காசா மீதான முற்றுகையால் ஏற்பட்ட பஞ்சத்தால் கடுமையான ஆபத்தில் பெருந்தொகை மக்கள் சிக்கியுள்ளனர் என்று தொண்டு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த 2023 ஒக்ரோபர் 7ஆம் திகதி ஹமாஸ் அமைப்பு இஸ்ரேலுக்குள் நடத்திய தாக்குதலில் 1,200 பேர் கொல்லப்பட்டனர். 251 பேர் பணயக் கைதிகளாக பிடிக்கப்பட்டனர். இவர்களில் விடுவிக்கப்பட்டவர்கள் இறந்தவர்கள் போக இன்னமும் 58 கைதிகள் ஹமாஸின் பிடியிலுள்ளனர்.

இந்தத் தாக்குதலின் பின்னர் காசாமீது இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் பலியானோர் தொகை 53 ஆயிரத்தை கடந்துள்ளது என்று காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)



பலஸ்தீனம்மீது 11ஆவது வாரமாக இஸ்ரேல் முற்றுகையை தொடர்கிறது. இதனால், அங்கு கடும் பஞ்சம் நீடிக்கிறது. தொண்டு நிறுவனம் ஒன்று அளிக்கும் உணவைப் பெற முண்டியடிக்கும் மக்கள்....!

# ரஷ்ய தாக்குதலில் 9 பேர் உயிரிழப்பு!

கீவ், மே 19

வடகிழக்கு உக்ரைனில் சிறிய பேருந்துமீது ரஷ்யாவின் ஆளில்லா விமானம் நடத்திய தாக்குதலில் 9 பேர் கொல்லப்பட்டனர் என்று அதிகாரிகள் கூறியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் ரஷ்ய எல்லை அருகே சுமி நகரில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலில் 7 பேர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

3ஆண்டுகளுக்கும் மேலாக ரஷ்யா - உக்ரைன் போர் நடக்கிறது. இந்தப் போரை நிறுத்துவது தொடர்பில் பேச்சு நடத்தப்பட்ட சில மணி நேரங்களிலேயு இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# உக்ரைன் - ரஷ்யா போர் நிறுத்தம் விரைவில் எட்டமுடியாத நிலையில்

## ஆயிரம் கைதிகளை பரஸ்பரம் பரிமாற இணக்கம்



இஸ்தான்புல், மே 19

ரஷ்யா - உக்ரைன் போர் நிறுத்த பேச்சுகள் கடந்த வெள்ளிக்கிழமை துருக்கியின் இஸ்தான்புல் நகரில் ஆரம்பமாகின.

இந்தப் பேச்சில் பங்கேற்ற உக்ரைன் அதிகாரிகள் இராணுவ சீருடையில் இருந்தனர். பேச்சின் ஆரம்பத்தில் இரு தரப்பினரும் கைகுலுக்க மறுத்துவிட்டனர்.

தொடர்ந்த பேச்சில் போரை நிறுத்துவது குறித்து எந்தவொரு சாதகமான முடிவும் எட்டப்படவில்லை. எனினும், இரு நாடுகளும் தலா ஆயிரம் கைதிகளை பரிமாற்றம் செய்வதற்கு மட்டும் ஒப்புக் கொண்டுள்ளன.

போர் நிறுத்தம் எட்டப்பட ரஷ்ய ஜனாதிபதியும் தானும் பேச வேண்டும் என்று உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி கூறியுள்ளார்.

இதனிடையே, தனக்கும் ரஷ்ய ஜனாதிபதி புடினுக்கம் இடையிலான பேச்சுகளே கணக்கில் எடுக்கப்படும். எயார் போர்ஸ் வன் விமானத்தில் புடினும் நானும் பேசும்வரை எதுவும் நடக்கப்வோதில்லை என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

இந்த சந்திப்பு எப்போது நடைபெறும் என்பது தெளிவாக தெரியவில்லை. எனினும், இந்தப் பேச்சுக்கு உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி அழைக்கப்பட வாய்ப்பில்லை என்றும் கூறப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



மழையால் போட்டி நிறுத்தம்

# நடப்பு சம்பியன் கொல்கத்தா தொடரிலிருந்து வெளியேறியது!




பெங்களூரு, மே 19

பெங்களூரு அணிக்கு எதிரான போட்டி மழையால் கைவிடப்பட்டமையால் நடப்பு சம்பியனான கொல்கத்தா அணி பிளேஓவ் வாய்ப்பை இழந்து வெளியுறியது.

இந்தியா - பாகிஸ்தான் போர் பதற்றத்தால் நிறுத்தப்பட்ட ஐ. பி. எல். தொடர் மீண்டும் ஆரம்பமாகியது. இந்த நிலையில், கொல்கத்தா நைற் ரைடர்ஸ், றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணிகள் மோதவிருந்த போட்டி மழையால் கைவிடப்பட்டது.

இதனால், இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது. இதனால், பிளே ஓவ் சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை நடப்பு சம்பியனான கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணி வெளியேறியது.

புள்ளிப்பட்டியலில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணி முதலிடத்தில் நீடிக்கிறது.

ஏற்கனவே சென்னை, ராஜஸ்தான், ஹைதராபாத் அணிகள் தொடரில் இருந்து வெளியேறிவிட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

இத்தாலி ஓப்பின் ரென்னிஸ்:

## 40 வருடங்களின் பின் இத்தாலியர் சம்பியன்!



ரோம், மே 19

இத்தாலி ஓப்பின் ரென்னிஸ் சம்பியன் பட்டத்தை ஜஸ்மின் பௌலினி கைப்பற்றியுள்ளார். இதன்மூலம், 40 ஆண்டுகளுக்கு பின்னர் இந்தப் பட்டத்தை கைப்பற்றிய இத்தாலிய வீராங்கனை என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார்.

இத்தாலி ஓப்பின் ரென்னிஸ் ரோம் நகரில் நடைபெற்றது. பெண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில், இத்தாலியின் ஜாஸ்மின் பௌலினி, அமெரிக்காவின் கோகோ காப் உடன் மோதினார். பௌலினி 6-4, 6-2 என்ற செற் கணக்கில் எளிதில் வென்று சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். (ஐ)

## சுப்பர்பெட் கிளாசிக் சதுரங்கம் சம்பியனானார் பிரக்ஞானந்தா




புக்கரெஸ்ட், மே 19

சுப்பர்பெட் கிளாசிக் சர்வதேச சதுரங்க தொடரில் மூன்றாவது சமநிலை தவிர்ப்பு போட்டியில் இந்தியாவின் பிரக்ஞானந்தா சம்பியனானார்.ருமேனியாவில் சுப்பர்பெட் கிளாசிக் சர்வதேச சதுரங்க தொடர் நடைபெற்று வந்தது. இந்தத் தொடரில் 10 சுற்றுகள் நடந்து முடிந்த நிலையில் 5.5 புள்ளிகளுடன் ஆர். பிரக்ஞானந்தா, பிரான்ஸ் நாட்டின் கிராண்ட் மாஸ்டர்களான பிரான்ஸின் வச்சியர்-லக்ரேவ், அலிரேசா ஃபிரூஸ்ஜா ஆகியோருடன் பகிர்ந்து கொண்டார்.

இதனால் வெற்றியாளரை தீர்மானிக்க சமநிலை தவிர்ப்பு நடத்தப்பட்டது. முதல் சமநிலை தவிர்ப்பில் அலிரேசா ஃபிரூஸ்ஜா மற்றும் பிரக்ஞானந்தா விளையாடினர். ஆட்டம் சமநிலையில் முடிந்ததால் தலா 0.5 புள்ளி வழங்கப்பட்டது.

தொடர்ந்து நடைபெற்ற 2ஆவது சமநிலை தவிர்ப்பில் வச்சியர்-லக்ரேவ், அலிரேசா ஃபிரூஸ்ஜா இடையிலான ஆட்டம் சமநிலையானது. 3ஆவது சமநிலை தவிர்ப்பில் பிரக்ஞானந்தா, வச்சியர்-லக்ரேவை வீழ்த்தி ஒரு புள்ளியை பெற்றார். அத்துடன், சம்பியன் பட்டத்தையும் வென்றார். (ஐ)

## லா லிகா சம்பியன் பார்சிலோனா வசம்!



மட்ரிட், மே 19

லா லிகா சம்பயின் பட்டத்தை 28ஆவது முறையாக பார்சிலோனா அணி கைப்பற்றியுள்ளது.

ஸ்பெயின் நாட்டில் நடைபெறும் முன்னணி உதைபந்தாட்டத் தொடர் லா லிகா. இதில் பார்சிலோனா, ரியல் மட்ரிட் உள்ளிட்ட 20 முன்னணி கழகங்கள் விளையாடி வருகின்றன. ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா இரண்டு முறை மோத வேண்டும். 38 போட்டிகளின் முடிவில் புள்ளிகள் பட்டியலில் முதலிடம் பிடிக்கும் அணி லா லிகா பட்டத்தை வெல்லும்.

இந்த ஆண்டுக்கான தொடரில் பார்சிலோனா நேற்று முன்தினம் எஸ்பான்யோல் அணியை எதிர்கொண்டது.இந்த போட்டியில் பார்சிலோனா 2-0 என வெற்றி பெற்றது. லேமின் யாமல் 53ஆவது நிமிடத்திலும், ஃபெமின் லோபஸ் (90,6) கடைசி நேரத்திலும் கோல் அடித்தனர்.

இதன்மூலம் 36 போட்டிகளில் 27 வெற்றி, 4 சமநிலை, 5 தோல்விகள் மூலம் 85 புள்ளிகள் பெற்று முதலிடம் பிடித்து லா லிகா கிண்ணத்தை வென்றது. பார்சிலோனாவின் 28ஆவது லா லிகா கிண்ணம் இதுவாகும்.

ரியல் மட்ரிட் 36 போட்டிகளில் 24 வெற்றி, தலா 6 சமநிலை, 4 தோல்வி மூலம் 78 புள்ளிகள் பெற்றுள்ளது. கடைசி இரண்டு போட்டிகளில் பார்சிலோனா தோல்வி அடைந்து, ரியல் மட்ரிட் வெற்றி பெற்றாலும் 84 புள்ளிகள்தான் பெற முடியும்.

இதனால் பார்சிலோனா லா லிகா கிண்ணத்தை வென்றது.பார்சிலோனா கடைசி 5 போட்டிகளில் தொடர்ந்து வெற்றியை பதிவு செய்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பணக்கார விளையாட்டு வீரர்கள் முதலிடம் பிடித்தார் ரொனால்டோ

நியூயோர்க், மே 19

உலகின் முதலாவது பணக்கார விளையாட்டு வீரர் என்ற பெருமையை மீண்டும் போர்த்துக்கல்லின் கிறிஸ்ரியானோ ரொனாலடோ பெற்றுள்ளார்.

பிரபல போர்ப்ஸ் பத்திரிகை வெளியிட்ட பட்டியலிலேயே அவர் முதலிடம் பெற்றார்.

கடந்த ஆண்டில் ரொனால்டோ மொத்தம் 27.5 கோடி டொலர்கள் (இலங்கை மதிப்பில் சுமார் 8 ஆயிரத்து 20 கோடி ரூபாய்) அவர் சம்பாதித்துள்ளார்.

இது போர்ப்ஸ் வரலாற்றில் ஒரு விளையாட்டு வீரர் ஆண்டுக்கு சம்பாதிக்கும் மூன்றாவது அதிகபட்ச தொகையாகும்.சவூதி புரோ லீக்கில் அல் நாசர் அணியை பிரதிநிதித்துவப்படுத்துவதன் மூலம் ரொனால்டோ பெரும் வருமானத்தைப் பெற்றார். அவரின் ஆண்டு வருமானம் 20 கோடி டொலர்களாகும். வணிக ரீதியாகவும் அவர் பணத்தை ஈட்டி வருகிறார். விளம்பர ஒப்பந்தங்கள், தனது சொந்த ஹோட்டல்கள், வாசனை திரவியங்கள் மூலமும் அவருக்கு வருமானம் கிடைக்கிறது.

ரொனால்டோவுக்கு அடுத்த இடத்தில் அமெரிக்க கூடைப்பந்து சுப்பர்ஸ்ரார் லெப்ரான் ஜேம்ஸ் 13.38 கோடி டொலர் (சுமார் 4 ஆயிரத்து 16 கோடி இலங்கை ரூபாய்) வருமானத்துடன் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளார். இது ரொனால்டோவின் வருவாயில் பாதிக்கும் குறைவானது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இரு வருடங்கள் டெஸ்ட் ஆடாதவர் மே.இ.தீவுகளின் அணித் தலைவர்!

ஜமைக்கா, மே 19

கடந்த இரு வருடங்களாக டெஸ்ட் போட்டியில் களமிறங்காத ரோஸ்டன் சேஸ் மேற்கிந்தியத் தீவுகளின் டெஸ்ட் அணியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட்டின் இருபது 20 அணியின் தலைவர் ரோவ்மன் பவல் அதிரடியாக நீக்கப்பட்டு, அவரின் இடத்துக்கு ஷாய் ஹோப் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், மேற்கிந்தியத் தீவுகளின் டெஸ்ட் அணியின் புதிய தலைவராக சகலதுறை வீரர் ரோஸ்டன் சேஸ் நியமிக்கப்பட்டுள்ளார். முன்னதாக இந்த ஆண்டு மார்ச் அணித் தலைவர் பதவியில் இருந்து கிரெய்க் பிராத்வைட் விலகியதையடுத்தே ரோஸ்டன் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்சமயம் 33 வயதான ரோஸ்டன் சேஸ் கடந்த 2023ஆம் ஆண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடியிருந்தார்.

அதன் பின்னர், அவர் டெஸ்ட் போட்டிகள் எவற்றிலும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்காக விளையாடவில்லை.

மேற்கிந்தியத் தீவுகளின் டெஸ்ட் அணியில் கடந்த 2016-ம் ஆண்டு அறிமுகமான இவர் இதுவரை 49 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 5 சதங்கள் மற்றும் 11 அரைச்சதங்களுடன் 2,265 ஓட்டங்களை எடுத்துள்ளார்.

அத்துடன், பந்துவீச்சில் 4 முறை ஐந்து விக்கெட்களை வீழ்த்தியதுடன் 85 விக்கெட்களையும் கைப்பற்றியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்படுகொலை நடக்கவேயில்லை
## மறுக்கிறார் மகிந்த ராஜபக்ஷ

கொழும்பு, மே. 19

கனடாவின் பிரம்டனில் சமீபத்தில் ஈழ வரைபடத்தை சித்தரிக்கும் தமிழ் இனப்படுகொலை நினைவுச்சின்னம் என அழைக்கப்படும், நினைவக திறப்பு இப்போதும் கூட பயங்கரவாதத்தின் இருண்ட நிழல்கள் நீடிக்கின்றன என்பதை துரதிஸ்டவசமாக நினைவுபடுத்துகின்றது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

யுத்த நிறைவின் 16 வருடங்கள் நிறைவை குறிக்கும் வகையில் விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உலகின் வல்லரசுகள் கூட பயங்கரவாதம் குறித்த அச்சத்தில் சிக்குண்டிருந்த வேளை, நான் விடுதலைப்புலிகளை எதிர்கொள்ளத் திட்டமிட்டேன் இது மனிதாபிமான நடவடிக்கை.

பிரம்டன் மேயர் ஆயிரக்கணக்கான தமிழர்கள் இலங்கை அரசால் இனப்படுகொலை செய்யப்பட்டனர் என்ற ஆதாரமற்ற பாரதூரமான குற்றச்சாட்டை முன்வைத்தார்.

யுத்தம் நடைபெற்றவேளை முப்படை தளபதியாக விளங்கியவன் என்ற அடிப்படையில் அதனை நான் முற்றாக மறுக்கின்றேன்-என்று குறிப்பிட்டுள்ளார். (அ)

## போரை...

அமைதியை நிலைநாட்டிய அனைத்து படையினரின் தியாகத்தையும், அவர்களின் துணிவையும் இன்று நாம் மகிழ்வுடன் நினைவு கூருகிறோம்.

உலகின் மிகவும் பயங்கரமான அச்சுறுத்தலுக்கு எதிராக, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில், அனைத்து இலங்கையர்களின் உரிமைகளையும் பாதுகாப்பையும் உறுதி செய்யும் ஒரு மனிதாபிமானப் பணியை இலங்கை முன்னெடுத்தது.

இந்த வரலாற்றுப் பொன்னான தருணத்தை நாம் சிந்திக்கும்போது, போர் காலத்தில் சகிப்புத்தன்மையுடன் துன்பங்களை எதிர்கொண்ட அனைவருக்கும் மரியாதை செலுத்துவது முக்கியமானதொரு கடமையாகும்.

எனினும், இந்த நிகழ்வுகளைத் தவறாகக் காட்ட நினைக்கும் முயற்சிகள், இலங்கை மக்களின் ஒற்றுமையையும் வலிமையையும் பாதிக்கும் - என குறிப்பிட்டுள்ளார். (அ)

## முள்ளிவாய்க்கால்...

செல்ல முயன்றனர். பொலிஸார் அவர்களை தடுத்து நிறுத்தினர். இதை யடுத்து, பொலிஸாருடன் அவர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில், நினைவேந்தலில் ஈடுபட்டவர்களை பார்த்து அந்தக் குழுவினர் "இராணுவம் பயங்கரவாதிகள் மீதே தாக்குதலை மேற்கொண்டது", "இலங்கை இராணுவம் பயங்கரவாதிகளுடனேயே போரிட்டது", "இவர்கள் இங்கு நினைவேந்தலில் ஈடுபடுவது வெட்க மாக உள்ளது", "இவர்கள் கள்ளப் புலிகள்", என்று கோஷங்களை எழுப்பினர்.

நினைவேந்தல் நிறைவடைந்து அங்கிருந்தவர்கள் வெளியேறியபோது அவர்களை பார்த்து 'கொட்டியா', 'டயஸ் போரா', என்றும் சத்தமிட்டிருந்தனர்.

## யாழில்...

நண்பர்களை வீட்டுக்கு வரவழைத்து மது பாவனையில் ஈடுபட்டுள்ளனர். அதன் பின்னர் நண்பர்கள் திரும்பிச் சென்றனர். சகோதரர்கள் இருவரும் உறக்கத்துக்குச் சென்றனர்.

பின்னர் குறித்த இளைஞனின் சகோதரர் அதிகாலை 1.30 மணியளவில் குறித்த இளைஞனைக் காணாத நிலையில் வெளியே வந்து பார்த்துள்ளார். இதன்போது குறித்த இளைஞன் கீழே விழுந்து கிடக்க காணப்பட்டார். பின்னர் சகோதரனும் உறவினரும் இணைந்து, அவசர நோயாளர் காவு வண்டி மூலம், அவரை யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். இந்நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். மரணத்துக்கான காரணிகள் அறியப்படாத நிலையில் உடற்கூற்று பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-05)

## நாடு...

பின்னர், அமெரிக்காவுக்குச் சென்ற பஸில் ராஜபக்ஷ அங்கேயே தங்கியிருந்தார். இந்நிலையிலேயே அவர் நாடு திரும்ப வுள்ளார்.

எவ்வாறாயினும், அவர் நாடு திரும்பிய பின்னர் மீண்டும் அரசியல் நடவடிக்கைகளைத் தொடங்குவாரா இல்லையா என்பது இன்னும் அறிவிக்கப்படவில்லை. (அ)

## தேர்தலில் விளையாடிய...

தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற பொலிஸ் மற்றும் சட்டமா அதிபர் துறை உள்ளிட்ட நிறுவனங்களின் மூத்த அதிகாரிகளின் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி திஸாநாயக்க, இந்த மாதம் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்ட பல வேட்பாளர்களுக்கு பல முன்னணி போதைப்பொருள் கடத்தல்காரர்கள் நிதியுதவி அளித்ததாகவும், அவர்களில் கணிசமான எண்ணிக்கையிலான வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும் தனக்குக் கிடைத்ததாகக் கூறப்படும் தகவல்கள் குறித்து தான் கவலை கொண்டுள்ளதாகக் கூறினார்.

குற்றவியல் கும்பல்கள் அரசியல் ஆதரவை இழந்த நேரத்தில், அவர்களுக்கு சார்பான அரசியல்வாதிகளை நியமிப்பதன் மூலம் அவர்கள் தங்கள் சட்டவிரோத நடவடிக்கைகளைத் தொடர முயற்சிப்பதாகவும், இது ஓர் ஆபத்தான எதிர்காலத்தின் அறிகுறியெனவும் ஜனாதிபதி விவரித்தார்.

உயர்மட்ட விசாரணைகளை நடத்துவதிலும், அவை தொடர்பான குற்றச்சாட்டுகளை பதிவு செய்வதிலும் பொலிஸார் எதிர்கொள்ளும் சிரமங்கள் குறித்து விவாதிப்பதற்காக இந்த சந்திப்பு நடைபெற்றது. மூத்த பொலிஸ் அதிகாரிகளுடன் சட்டமா அதிபர் பரிந்த ரணசிங்க மற்றும் சட்டமா அதிபர் துறையின் மூத்த அதிகாரிகளும் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

உள்ளூர் அரசியல்வாதிகளுக்கு ஆதரவளிக்கும் குற்றவியல் கும்பல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளை உடனடியாக விசாரிக்கவும், முன்னணி கடத்தல்காரர்களுக்கு எதிரான வழக்குகளை விரைவுபடுத்தவும் ஜனாதிபதி பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால மற்றும் பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன ஆகியோருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை விசாரிக்க சிறப்பு நீதிமன்றங்களை அமைக்க மூத்த கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ரோஹந்த அபேசூரிய முன்மொழிந்தார். கடுமையான ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பான தகவல்களைப் பெறும்போது, காவல் துறையினர் உடனடியாக சட்டமா அதிபருக்குத் தெரிவிக்க வேண்டும், விசாரணைகளைத் தொடங்க வேண்டும் மற்றும் நீதிமன்றத்தில் ஆதாரங்களை சமர்ப்பிக்க வேண்டும் - என்றார் (அ)

## தமிழர் வாழ் இடங்கள்...

இதேவேளை, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பல கோவில்கள், தேவாலயங்களில் கொல்லப்பட்டவர்களின் நினைவாக விசேட பூசை வழிபாடுகள், பிரார்த்தனைகளும் நடைபெற்றன. அத்துடன், குருதிக் கொடை முகாம்களும் இயங்கின.

**யாழ்ப்பாணத்தில்...!**

இதேநேரம், முள்ளிவாய்க்கால் படுகொலையின் 16ஆவது ஆண்டு நினைவேந்தல் யாழ்ப்பாணத்திலும் பல்வேறு இடங்களிலும் கடைப்பிடிக்கப்பட்டது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகம், அரசியல் கட்சிகளின் பணிமனைகள், பொது நிறுவனங்கள், சனசமூக நிலையங்கள் எனப் பல இடங்களில் முள்ளிவாய்க்கால் அஞ்சலிகள் நடைபெற்றன. அத்துடன், பல இடங்களிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

**வடக்கு மாகாணத்தில்...**

பிரதான நினைவேந்தல் முள்ளிவாய்க்காலில் நடைபெற்றிருந்தது. கிளிநொச்சி, முல்லைத்தீவிலிருந்து அதிகளவானோர் இந்த நினைவேந்தலில் பங்கேற்றிருந்தனர். வீதியால் பயணிப்பவர்களுக்கு முள்ளிவாய்க்கால் கஞ்சி, குளிர் பானங்கள், உணவுகள் வழங்கல் பல இடங்களில் முன்னெடுக்கப்பட்டன. இறுதிப் போரின்போது மக்கள் கொல்லப்பட்ட இடங்களிலும் உறவுகள் கூடி அஞ்சலி செலுத்தினர்.

மன்னார், வவுனியா மாவட்டங்களிலும் கொல்லப்பட்ட மக்களின் நினைவாக ஆத்ம சாந்தி பிரார்த்தனைகள், முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கலை பல்வேறு அமைப்புகளும் முன்னெடுத்தன.

இதேநேரம்,

ஆலயங்கள், தேவாலயங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்றன.

**கிழக்கு மாகாணத்தில்**

மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறையிலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் உணர்வெழுச்சியாக அனுஷ்டிக்கப்பட்டது. மட்டக்களப்பில் வாகரை, காந்தி பூங்காவில் உணர்வெழுச்சியுடன் அஞ்சலி நடைபெற்றது. கொல்லப்பட்ட உறவுகளின் நினைவாக பல்வேறு இடங்களிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கப்பட்டது.

புலம்பெயர்ந்து தமிழர்கள் வாழும் தேசங்களிலும் அஞ்சலி நிகழ்வுகள், முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. பிரிட்டனின் சவுத்என்டில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது. இதேநேரம், முள்ளிவாய்க்கால் அவலத்தை வெளிப்படுத்தும் ஒளித்திரை ஊர்தி பவனி ஒன்றும் லண்டனில் இடம்பெற்றது.

இதேசமயம், தமிழ் மக்கள் நிறைந்து வாழும், கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, சுவிற்சர்லாந்து, நோர்வே உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளிலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது. (ஐ)

## தமிழின விடுதலை...

பிரகடனத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு,

தமிழின அழிப்பு, வரலாற்று செயன்முறையூடு முள்ளிவாய்க்காலில் உச்சந்தொட்டு இன்றுடன் 16 ஆண்டுகள் நிறைவடைகின்றன.

சிங்கள - பௌத்த பேரினவாதம் இந்தத் தீவின் சக தேசமான தமிழர்களை அழிக்கவும் அடக்கியாளவும் வெற்றி கொள்ளவும் கடந்த எண்பது ஆண்டுகளுக்கும் மேலாக திட்டமிட்ட வகையில் செய்துவரும் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பின் காரணமாக தமிழ்த் தேசம் படிப்படியாக அழிந்து வருகிறது.

இன அழிப்பு எதார்த்தத்தின் விளைவாக எமது இருப்பை பாதுகாப்பதற்கும், உரிமைகளைப் பெறுவதற்குமாக எழுந்த அசாத்தியமானதும், ஈகங்கள் நிறைந்ததுமான உரிமை போராட்டத்தினதும் விடியலுக்காக ஒரு தேசமாக நாங்கள் அணி திரண்டு நின்றதற்கானதுமான அடையாளமாகவும் உள்ள முள்ளிவாய்க்காலையும் நாம் இன்று நினைவு கூருகிறோம்.

தமிழ் இன அழிப்பில் பிரித்தானிய காலனித்துவத்தின் வகிபங்கு மிக முக்கியத்துவம் வாய்ந்தது. பிரித்தானிய காலனித்துவத்திடம் பரிசாகக் கிடைத்த ஒற்றையாட்சி அரசியல் கட்டமைப்பை, தமிழ் இன அழிப்புக்கான ஒரு கருவியாக சிங்கள - பௌத்த பேரினவாதம் இலங்கை சுதந்திரத்தின் பின்னான அரசியல் வரலாற்றில் பயன்படுத்தியது.

2009இற்கு முன்னர் தமிழர் தாயகத்தை அபகரிக்கரிப்பதற்கு இராணுவ வன்வலுவைப் பயன்படுத்திய - கொழும்பு அதிகார மையத்தை கையகப்படுத்திய அரசாங்கங்கள், 2009இற்குப் பின்னர், பௌத்த மதத்தையும் அபிவிருத்தியையும் மென் வலுவாகப் பயன்படுத்தி தமிழர் மீதான அடக்குமுறையையும் , தமிழரின் பூர்வீக தாயகப் பரப்பான வடக்கு - கிழக்கையும் தொடர்ந்தும் கட்டமைக்கப்பட்ட தமிழ் இன அழிப்புக்கு ஊடாக அபகரித்து வருவதும் தமிழர் தாயகத்தை சிங்கள - பௌத்த மயமாக்குவதும் எம் கண் முன்னே நடந்தேறிக்கொண்டிருக்கின்றன.

21ஆம் நூற்றாண்டில் ஏக துருவ உலக ஒழுங்கிற்கான போட்டி பல முனைகளில் நடைபெற்றுக்கொண்டிருப்பதை அவதானிக்கும் போது, ஏக துருவ பேரரசு கட்டமைப்பு, தனது புவிசார் நலன்களுக்காக எந்த விலையையும் கொடுக்க தயாராகவுள்ளதை, அன்று முள்ளிவாய்க்காலும், இன்று பலஸ்தீனமும் வெளிக்கொண்டு வருகின்றன.

தற்போது அதிகாரத்திலுள்ள அரசாங்கம், தமிழ் இனத்தின் நில மீட்பை மையப்படுத்திய விடுதலை போராட்டத்தை, இனவாதமாகச் சித்திகரிக்க முயற்சிக்கிறது. இனவாதமாகச் சித்தரிப்பதன் மூலம் அதை உள்ளூர் பிரச்னையாக சோடித்து, ஈழத்து தமிழர்களின் தேசத்திற்கான அரசியல் வேணவாவையும், அரசியல் அறக்கோரிக்கைகளையும் இல்லாதொழித்து, இலங்கையை சிங்கள - பௌத்த ஏக அடையாளத்துடன் கட்டமைக்க முனைவது, இத்தீவின் பல்லினத் தன்மையை சாகடிப்பதாகும்.

தமிழ் இன அழிப்பு குற்றத்தை மலினப்படுத்துகின்ற செயன்முறையில் ஈடுபடும் தமிழ் அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகள் கண்டனத்திற்குரியவை மட்டுமல்ல, அவை தமிழின விடுதலைப் போராட்டத்தின் திசையை மாற்றுவதோடு, இலங்கை அரசுக்கும் உலக வல்லாதிக்க சக்திகளுக்கும் விலைபோனதாக வரலாறு அவர்களை நினைவு கொள்ளும். தற்போது ஆட்சி அமைத்த அநுர அரசாங்கம், தமிழ் இனத்தின் கூட்டு அரசியல் வேணாவை புறந்தள்ளி வருவதோடல்லாமல், தமிழ் தேசியத்தின் விழுமியங்கள் மீதான நம்பிக்கையை உடைத்து வருகிறது.

அதை ஒரு போர் முறையாக முன்னெடுக்கின்றது. தமிழ்த் தேசியத்தின் நம்பிக்கை விழுமியங்களை தற்போதைய உலக ஒழுங்குக்கு பொருத்தப்பாடற்றதாக கட்டமைத்து, தமிழ் இனத்தின் கூட்டு அரசியல் நம்பிக்கை மீதான உளவியல் போரை கட்டவிழ்த்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

முள்ளிவாய்க்கால் ஈழத் தமிழின எழுச்சியின் அடையாளம். தமிழ் இன அழிப்பை முள்ளிவாய்க்கால் திடலில் நினைவு கூர்வது மீண்டும் எம்தினத்தின் எழுச்சியை சுட்டி நிற்கிறது. ஈழத்தமிழ் இனமாக சிங்கள அரசு அடக்குமுறைக்கெதிராகவும், சிங்கள ஒற்றையாட்சி அரசியல் அலகை தனது புவிசார் நலன்களுக்காக தக்க வைத்துக்கொண்டிருக்கும் ஏகாதிபத்திய பேரரசு கட்டமைப்பின் அடக்குமுறைக்கெதிராகவும், போராட அணிதிரள்வதை தவிர வேறு எவ்வித தெரிவும் எமக்கு முன் வைக்கப்படவில்லை - என்றுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியமைக்க இரகசிய பேச்சு

சஜித் தரப்பின் இறுதித் தீர்மானம் விரைவில்



கொழும்பு, மே 19

உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியமைப்பது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில், எதிரணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய கட்சிகளுடன் இரகசிய பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன. இனிவரும் நாட்களிலும் தொடர் பேச்சுக்களை முன்னெடுத்து இறுதித் தீர்மானத்தை நாட்டு மக்களுக்கு அறிவிப்போம் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

இந்த பேச்சுக்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆரம்பமாகின. கடந்த வியாழனன்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் எதிர்க்கட்சிகளின் செயலாளர்களுக்கு இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய எதிர்க்கட்சித் தலைவருடனான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய நேற்று முன்தினம் காலை முதல் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஒவ்வொரு கட்சிகளின் செயலாளர்களையும் பிரத்தியேகமாக சந்தித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சி, சிறிலங்கா பொதுஜன பெரமுன, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, பொதுஜன ஐக்கிய முன்னணி, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்த தரப்பினர் உள்ளிட்ட பலருடன் இந்த பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படவுள்ளது.

எவ்வாறிருப்பினும் இவை அனைத்தும் இரகசிய பேச்சுக்களாகவே அமைந்துள்ளன. இறுதித் தீர்மானமொன்றை எடுத்த பின்னரே இது குறித்து நாட்டுக்கு அறிவிக்கப்படும் என மத்தும பண்டார மேலும் தெரிவித்தார். (எ)

## மின் கட்டணத்தை அதிகரிப்பதால் மக்களுக்கு சுமைகள் அதிகரிக்கும்

### நிர்வாக திறன் இன்மை காரணமா?

கொழும்பு, மே. 19

மின் கட்டணத்தை அதிகரிப்பதன் ஊடாக மக்களுக்கு மேலும் சுமையை அதிகரிப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்வதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மின் கட்டணத்தை 18.3 வீதத்தால் அதிகரிப்பதற்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் அரசாங்கம் யோசனை முன்வைத்துள் ளது. தேர்தல் காலத்தை நினைவுபடுத் திப் பாருங்கள்.

மின் கட்டணத்தை மூன்றில் ஒரு பகுதியாக குறைப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க உள்ளிட்டோர் வாக்குறுதியளித்தார்கள்.

ஆனால் இன்று என்ன நடந்துள்ளது?

இதுவரை காலமும் இலாபத்தில் இயங்கிய மின்சார சபை, இப்போது நட்டத்தில் இயங்குவதாக அறிவித்துள்ளது. அவ்வாறாயின் நிர்வாகத் திறன் இல்லாமையே காரணம். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இதற்கு பொறுப்புக் கூறவேண்டும்.

அவ்வாறு நட்டத்தில் இயங்குவதா னால் ஊழல் அதிகரித்துள்ளதா என கேட்க விரும்புகிறேன்.

நாட்டின் தொழிற்றுறை 10 வீத இலாபத்தை இலக்காகக்கொண்டே இயங்குகிறது.

மின் கட்டணம் 18 வீதத்தால் உயர்வடைந்தால் அந்த் துறை பேராபத்தை சந்திக்கவேண்டிவரும்.

அதுமாத்திரமல்லாது, பொதுமக்களும் பெரும் சிரமங்களுக்கு முகங் கொடுக்க நேரிடும்.

அரசாங்கத்தில் நிர்வாகத் திறன் இல்லையெனில் அது குறித்து நடவடிக்கை எடுத்து இலாபமீட்டும் செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும் - என்றார். (அ)

வவுனியா மாநகர சபையில் ஐக்கிய மக்கள் சக்தி

# இரு முஸ்லிம்களை நிறுத்த முயற்சி தமிழ் உறுப்பினர்கள் புறக்கணிப்பு

வவுனியா, மே 19

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வவுனியா மாநகர சபையில் ஐக்கிய மக்கள் சக்திக்கு கிடைத்த இரு போனஸ் ஆசனங்களையும் ஒரே வட்டாரத்தில் போட்டியிட்டு தோல்வியடைந்த இரு முஸ்லிம் உறுப்பினர்களுக்கு வழங்க முயற்சி எடுத்து வருவதாக கட்சியில் போட்டியிட்ட ஏனைய வேட்பாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.**

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் வவுனியா மாவட்டத்தில் அதன் அமைப்பாளர் ரசிக்கா பிரியதர்சினி மற்றும் குறித்த கட்சியில் கூட்டிணைந்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன் ஆகியோர் வவுனியா மாவட்டத்தில் வேட்பாளர்களை நிறுத்தியிருந்தனர்.

இதில் வவுனியா மாநகர சபையில், ஐக்கிய மக்கள் சக்தியில் நேரடி வேட்பாளர்களாக தாண்டிக்குளம், பண்டாரிக்குளம், வைரவப்புளியங்குளம், குடியிருப்பு, மூன்றுமுறிப்பு, இறம்பைக்குளம், சின்னப்புதுக்குளம், கோவில்குளம் ஆகிய 8 வட்டாரங்களில் தமிழ் வேட்பாளர்களும், பட்டானிச்சி புளியங்குளம் (இரட்டை தொகுதி), கடைவீதி ஆகியவற்றில் முஸ்லிம் வேட்பாளர்களும் போட்டியிட்டிருந்தனர்.

இந்த நிலையில் நேரடியாக அதிக தமிழ் வேட்பாளர்கள் பெற்றுக் கொடுத்த வாக்கின் அடிப்படையில் இரு போனஸ் ஆசனங்கள் வவுனியா மாநகர சபையில் ஐக்கிய மக்கள் சக்திக்கு கிடைத்திருந்தது. குறித்த இரு போனஸ் ஆசனத்தையும் இரட்டைத் தொகுதிகளைக் கொண்ட பட்டானிச்சி புளியங்குளம் பகுதியில் போட்டியிட்டு தோல்வியடைந்த ஒரே வட்டாரத்தைச் சேர்ந்த இரு முஸ்லிம் பிரதிநிதிகளை நியமிப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சியில் போட்டியிட்ட தமிழ் வேட்பாளர்கள் பாராளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீனின் முடிவால் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

தமிழ் உறுப்பினர் ஒருவரையாவது நியமிக்கவேண்டும் எனவும் அவர்கள் கோரியுள்ளனர். இது தொடர்பில் சஜித் பிரேமதாஸ கவனம் செலுத்த வேண்டும் எனவும் வேட்பாளர்கள் கோரியுள்ளனர். (எ-10)

# வீதி விபத்துக்களை கட்டுப்படுத்த தேசிய வேலைத்திட்டம் அவசியம்

### ஜனாதிபதியிடமிருந்து எந்தவித பதில்களும் இல்லை

கொழும்பு, மே 19

நாட்டில் நாளாந்தம் அதிகரித்து வரும் வீதி விபத்துக்களை கட்டுப்படுத்த தேசிய வேலைத்திட்டம் அவசியம் என்று இலங்கை மருத்துவ சங்கத்தின் முன்னாள் தலைவர் சமத் தர்மரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் கலந்துரையாட கடந்த மார்ச் மாதம் 6 ஆம் திகதி வழங்கிய கடிதத்துக்கு ஜனாதிபதி தரப்பினரிடமிருந்து இதுவரை எந்தவித பதில்களும் வழங்கப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

இலங்கையில் பயணிகள் போக்குவரத்துக்கு பயன்படுத்தப் படுபவை பேருந்துகள் அல்ல அவை லொறிகளாகும். லொறியின் உடல் பாகத்தைக் கொண்டு அவை வடிவமைக்கப்பட்டுள்ளது. பயணிகள் பஸ் என்பதே பேருந்து. பேருந்துகளின் இறக்குமதிக்கு அதிகளவான தீர்வை வரி அறவிடப்படுவதால், பயணிகள் போக்குவரத்துக்கு லொறிகளே கொள்வனவு செய்யப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

வீதி விபத்துக்கள், நிவாரணம் தொடர்பில் இலங்கை மருத்துவ சங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

விபத்துக்களை குறைப்பதற்கான நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட வேண்டும். இதற்கான முறையான திட்டம் ஒன்றையும், அதிகாரமிக்க தீர்மானங்களை முன்னெடுக்கக்கூடிய தேசிய மட்டத்திலான குழுவை நியமிப்பது தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாட காலஅவகாசம் வழங்குமாறு இரு முறை தற்போதைய ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை வழங்கியுள்ளோம்.

ஏற்கனவே மார்ச் 6 ஆம் திகதி வழங்கிய கடிதத்துக்கு ஜனாதிபதி தரப்பினரிடமிருந்து எந்தவித பதில்களும் வழங்கப்படவில்லை. இந்த நிலையில் நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ள கடிதத்துக்கும் அவ்வாறானதொரு நிலையே ஏற்படலாம்.

மருத்துவ சங்கத்தால் வழங்கப்படும் கடிதம் ஜனாதிபதியிடம் உரியவாறு சென்றடைகிறதா? என்பது கேள்விக்குறியாக உள்ளது.

பொறுப்புக் கூற வேண்டிய அரசாங்கத் தரப்பினர் விபத்துக்களை கட்டுப்படுத்த செயல்திறனான வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். சுகாதார அமைச்சு, பொலிஸார் என 80 இற்கும் அதிகமான அமைச்சுக்களும் பிரிவுகளும் இதனுடன் தொடர்புடையவை. ஆகையால் தேசிய மட்டத்திலான வேலைத் திட்டம் ஒன்றே எமக்கு அவசியம்- என்றார். (எ)

# இனவாத அரசியல் வியாபாரிகளுக்கு காலம் சிறந்த பாடத்தை கற்பிக்கும்

### அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 19

அற்ப அரசியலுக்காக இனவாதம் பேசி தேசிய மக்கள் சக்தியையும் தமிழ் பேசும் மக்களையும் பிரிக்க முற்படும் அரசியல் வியாபாரிகளுக்கு காலம் சிறந்த பாடத்தை கற்பிக்கும் என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களைச் சந்தித்து கலந்துரையாடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எப்படியான அரசியல் சூழ்ச்சிகள் வகுக்கப்பட்டாலும் மக்களுக்கான அரசியலை முன்னெடுக்கும் தேசிய மக்கள் சக்தியை கைவிட்டு செல்வதற்கு தமிழ் பேசும் மக்கள் தயாரில்லை.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு பின்னடைவு ஏற்பட்டுவிட்டதாக அரசியல் களத்தில் எதிரணிகள் ஒப்பாரி வைக்கின்றன. உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவை, பொதுத்தேர்தல் முடிவுடன் முடிச்சி போடுகின்றன. கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் நிலைமை புரியும்.



தேசிய மக்கள் சக்தி 266 சபைகளைக் கைப்பற்றியுள்ளது. வடக்கிலும் 150 இற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் தெரிவாகியுள்ளனர். எனவே பின்னடைவு, வீழ்ச்சி எனக் கூறப்படுவதெல்லாம் அப்பட்டமான பொய். மக்கள் ஆதரவு எமக்கு என்றும் உள்ளது. ஏனெனில் நாம் மக்கள் அரசியலை முன்னெடுப்பவர்கள்.

உண்மையான நல்லிணக்கம் மூலம் தமிழ் மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு இந்த அரசாங்கம் முழு வீச்சுடன் செயல்படுகின்றது. இதற்கு மக்களும் துணை நிற்கின்றனர். எனினும், இனவாதம் பேசி மக்களை பிரித்தாளும் அரசியலை சிலர் முன்னெடுக்க முற்படுகின்றனர்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.05.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org